
வார இதழ்

# தேசியம்

www.thesiyamnews.com


THESIYAM තේසියම්

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர் - 02 இதழ் - 27 10.09.2024 - 16.09.2024 வள்ளுவர் ஆண்டு 2054 பக்கங்கள் 12 ஊக்குவிப்பு : ரூ.80.00

# 'கிள்ளிப்போடும்' அதிகாரங்களுக்கு தமிழ் மக்கள் ஏமாறமாட்டார்கள்!

## விக்னேஸ்வரன் எம்.பி காட்டம்!



ஜனாதிபதித் தேர்தல்


## 2024



## சிங்கள இனவாதிகளை புறக்கணிப்போம்...
## தமிழர் உரிமைக்கு வாக்களிப்போம்...


தமிழ்ப் பொது வேட்பாளர்

## பா.அரியநேத்திரன்



தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## நிலைப்பாடுசார் தெளிவுபடுத்தலுக்கான காலம்

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் இந்தக் காலம் மக்களின் அரசியல் நிலைப்பாடுகள் புடம்போடப்படும் காலமாக இருக்கவேண்டியது கட்டாயமாகும். தமிழ் பொது வேட்பாளர் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி புறப்பட்டுவிட்டார். தேர்தல் அறிவிக்கப்பட்டு பொது வேட்பாளருடைய பெயர் அறிவிக்கப்பட்டது முதல் வடக்கிலேயே அவருடைய பிரச்சாரங்கள் சந்திப்புக்கள் இருந்து வந்தன. தற்போது அவர் பாதித் தூரப் பிரச்சிராத்தினைக் கடந்திருக்கிறார்.

மிச்சமிருக்கின்ற மிகுதியையும் அவர் கடந்துவிட்டால் பிரச்சாரம் ஓய்வுக்கு வந்துவிடும். ஆனால். இந்தக் காலத்தில் மக்களது அரசியல் நிலைப்பாடுசார் தெளிவுபடுத்தல்கள் சரியான முறையில் நடைபெற்றிருக்கிறதா என்று கேள்வியை அவர் இப்போது கேட்டுக் கொள்வது கட்டாயமாகும். பொதுக் கட்டமைப்பினுடைய வேட்பாளராக இவர் நிறுத்தப்பட்டார். நீண்டகாலமாக பாராளுமன்ற உறுப்பினராக அவர் பயணித்த கட்சியின் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருக்கே அவருடைய பெயர் தெரியாமலிருக்கின்ற நிலைமை மிகவும் துரதிஸ்டமாகும். எனவே நிலைப்பாடு சார் தெளிவுபடுத்தல் கட்டாயமாகும்.

இந்த ஜனாதிபதித் தேர்தல் வடகிழக்கு மக்களுக்கு மாத்திரமல்ல, தென் பகுதி மக்களுக்குமானதுதான் ஆனால், பாராளுமன்றத்தில் பேசவேண்டியது எது நம் ஊரில் பேசவேண்டியது எது என்ற தெளிவில்லாத பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருப்பவர்கள் என்றவகையில் பல உண்மைகளை வெளிப்படுத்த வேண்டிய தேவையும் இருக்கிறது.

தமிழர்களாகிய நாம் நிறுத்தியிருக்கின்ற தமிழ்ப் பொது ஜனாதிபதி வேட்பாளர் பற்றிய நிலைமையினை அலசி ஆராய்கின்ற, விமர்சிக்கின்ற மேடையாக பாராளுமன்றத்தினை பயன்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினரை நாம் என்ன வென்று சொல்வது. தேர்தல்கள் விமர்சனங்களுக்கும், ஏச்சுக்களுக்கும், பேச்சுக்களுக்கும், அவதூறுப் பேச்சுக்களுக்கும் ஏதுவானதே. ஆனால், அதனை மட்டுப்படுத்திக் கொள்வதும், விமர்னங்கள் அவதூறுகளுக்கு விளக்கம் கொடுக்கவேண்டியது அதனை வாங்கிக் கொள்பவருடைய கடமையாகும். இல்லையானால், அவற்றை ஏற்றுக்கொண்டதற்கு ஒப்பாகும்.

ஜனாதிபதித் தேர்தலும் அத் தேர்தல் தொடர்பான பரப்புரைகளுமே தற்போதைய காலத்தில் பலவாறான ஆராய்வுகளுக்கு உட்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வேட்பாளர்களும் தம்முடைய தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுவிட்டனர். பிரதான வேட்பாளர்களது எந்தவொரு விஞ்ஞாபனத்திலும் தமிழர்களுடைய நீண்டகால இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காணவில்லை. எல்லோரும் பூசலையும் மெழுகலையும் செய்து வைத்திருக்கிறார்கள். இந்தப் பூசி மெழுகல் களுக்கிடையில் நம் தமிழர்களுக்கான தீர்வு எப்போது கிடைக்கும் என்பதே நம்எல்லோருக்கும் கவலையாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தெளிவான பதிலை வெளியிடுவதற்கு முடியாமைக்கு காரணம் என்ன? தோல்வியில் பயமா? இல்லை, சட்டச் சிக்கலா? சட்டச்சிக்கல் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? அதற்கு யார் காரணம்? என்ன என்று எம்மால் வினவ மாத்திரமே முடியும்.

1987ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமாக அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டிருந்தாலும் இதுவரையில் அத் திருத்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமோ எதிர்க்கட்சிகளோ முயற்சிக்கவில்லை. மாறாக அதிலிருந்து ஒவ்வொன்றாக கழற்றுவதற்கே துணை நின்றிருக்கின்றனர். தேர்தல் வரும் போது மாத்திரம் அது நடக்கும் இது நடக்கும் என்று பிரச்சாரம் செய்கின்ற நிலைமையே காணப்பட்டது. இந்த நடைமுறை இம்முறை நடைபெறுகின்ற தேர்தலிலேனும் மாற்றத்துக்கு உட்பட வேண்டும்.

13ஆவது திருத்தத்தின் மூலம் உருவான மாகாண சபை தமிழர்களுக்கான முழுமையான தீர்வல்ல என்றாலும் வடக்கு கிழக்கின் ஒருமிப்பை இல்லாமல் செய்தது மக்கள் விடுதலை முன்னணியாகும். அது தற்போது தேசிய மக்கள் சக்தியாக தேர்தல்களில் போட்டியிடுகிறது.

நீண்டகாலமாக மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற வில்லை. வட மாகாண சபைத் தேர்தல் 2017ஆம் ஆண்டு நடைபெற்றிருக்கவேண்டும். கிழக்கு மாகாண சபைத் தேர்தல் 2018ஆம் ஆண்டு நடைபெற்றிருக்கவேண்டும். கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு வேட்பு மனுக்கள் கோரப்பட்டு பின்னர் அரசாங்கத்தின் தோல்விப் பயம் காரணமாக பொருளாதாரப் பிரச்சினையைக் காரணமாகக் காண்பித்து ஒத்திவைக்கப்பட்டது. அவ் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் குரல் கொடுக்காத அமைப்புகள் இல்லை. ஆனால் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எந்த அமைப்பும் குரல் கொடுக்கவில்லை. இவ்வாறானதுதான் பெரும்பான்மையினரின் ஜனநாயக அரசியலாகும்.

ஜனாதிபதித் தேர்தல் என்பது பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானிக்கப்படுவதாகும். ஆனால், வட கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தங்களின் பொதுப் பிரதிநிதி சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாக்கிசெல்வம் அரியநேத்திரனை வெல்லமுடியாது எனத் தெரிந்தும் கூட நிறுத்தியுள்ளார்கள். இது ஏன் என்பதது தென்னிலங்கை சார் அரசியல் கட்சிகள், ஜனாதிபதி வேட்பாளர்கள் தென்பகுதி மக்களாலும் புரிந்து கொள்ளப்படவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்களின் ஆதரவுடன், தமிழ்த் தேசியத்தின் பால் ஆதரவு கொண்ட விஜயகுமாரதுங்கவின் மனைவி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் ஆகியோர் வெற்றிபெற்றிருந்தனர். ஆனால் இனிவரும் காலங்களில் நடைபெறும் தேர்தல்களில் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் வெற்றிபெற்ற ஜனாதிபதிகள் இருக்கப் போவதில்லை. இதுவும் ஒருவகையான தகவலே.

போராட்டமே வாழ்க்கையாக கொண்டிருந்த தமிழர்கள் தம்முடைய உரிமைகளை அடைந்து கொள்வதற்கான முயற்சியில் எடுத்துவைத்திருக்கும் பொதுவேட்பாளர் இது வரையில் உருவாகாத முயற்சியாகவும் இனிவரும் காலங் களில் தமிழர்களின் உரிமைப்போராட்டத்தின் மற்றொரு படிமுறையாகவும் இருக்கும். அந்த வகையில் தமிழர்களின் நிலைப்பாட்டையே தமிழ் பொது வேட்பாளர் – பொதுக் கட்டமைப்பு தமிழர்களிடையே நிலைநிறுத்தவேண்டும். இதுவே காலத்தின் கட்டாயமுமாகும்.

## கிள்ளிப்போடும் அதிகாரங்களுக்கு தமிழ் மக்கள் ஏமாறமாட்டார்கள்!

**நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்கினேஸ்வரன்**

ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகிய இருவரினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் "கிள்ளிப்போடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்" என்பதையே வெளிப்படுத்துகிறது. நாம் இனிமேலும் அவர்களின் போலி வாக்குறுதிகளுக்கு ஏமாறாது எமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இருப்பினைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஊடாகநாம் ஓங்கி ஒலிக்க வேண்டும்

இவ்வாறு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்கினேஸ்வரன் வேண்டு கோள் விடுத்துள்ளார். இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்தியறிக்கையில் உள்ளதாவது:- கடந்த வாரம் வெளியான பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் நாம் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தியிருப்பதன் தேவை மற்றும் அது தொடர்பிலான எமது சரியான முடிவு ஆகியவற்றை எடுத்துக்காட்டுகின்றன.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ ஆகிய இருவருமே தற்போதைய அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். 13 ஆவது திருத்தச் சட்டம் பொலிஸ், காணி மற்றும் நிதி ஏற்பாடுகளுடன் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று இருவருமே உறுதியளிக்கவில்லை.

பொலிஸ், காணி மற்றும் நிதி அதிகாரங்கள் பிடுங்கப்பட்டு தற்போது அரசமைப்பில் இருக்கும் பல மற்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கும் அதிகாரங்களை ஒத்த அதிகாரப் பகிர்வே அவர்களின் யோசனையாக இருக்கிறது. தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ளவகையில் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க நாம் தயாராக இல்லை என்ற செய்தியை அவர்கள் ஏற்கனவே தெளிவாக வெளிப் படுத்திவிட்டார்கள். வடக்கையும் கிழக்கையும் பிரிக்க நடவடிக்கை எடுத்தவர் அநுரகுமார..

அதனால் நாம் இனிமேலும் உங்களின் போலி வாக்குறுதிகளையும் ஏமாற்றுகளையும் நம்பப் போவதில்லை என்ற செய்தியை நாம் சிங்கள அரசியல்வாதிகளுக்கு எடுத்துக் கூறவேண்டும் தமிழ்ப் பொது வேட்பாளர் ஊடாக நாம் ஓங்கி ஒலிக்க வேண்டும். இது காலம் எமக்கு ஏற்படுத் தியிருக்கின்ற ஒரு சந்தர்ப்பமும் நிர்ப்பந்தமும் ஆகும் – என்றுள்ளது.

## தமிழ் மக்களின் ஆயுதம் தமிழ்ப் பொது வேட்பாளர் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

தேர்தல் காலங்களில் தமிழ்த்தேசியம் பேசுகின்றோம் என்ற போர் செயற்பட்டு வரும் தமிழ்த்தேசியக் கட்சிகள் இந்தச் சந்தர்ப்பத்தில் சிந்தித்துச் செயற்பட வேண்டும். தமிழ்மக்களின் உரிமைகளை நிலைநாட்டக் கூடியவராக நிறுத்தப்பட்டுள்ள தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு உங்கள் ஆதரவை வழங்கவேண்டும்.

- இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. தேர்தல் காலத்தில் தென்னிலங்கையால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களையும், தனிப்பட்ட இருட்டுப் பேச்சுகளையும் நிறுத்த வேண்டும்.

போர் மௌனிக்கப்பட்ட பிறகு கடந்த 15 ஆண்டுகளாக இன்றுவரை தமிழ்மக்களுடைய வாக்குகளை அபகரித்துக் கொண்டு தென்னிலங்கை அரசாங்கத்தைப் பாதுகாக்கும் வகையில் தமிழ்க்கட்சிகள் காட்டுகின்ற அக்கறையை வாக்களித்த தமிழ்மக்களின் நலன்களிலும், தமிழ் மக்களின் உரிமை சார்ந்த விடயங்களிலும் காட்ட முன்வர வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் தங்கள் வாக்குகளை உரிமைசார்ந்து பயன்படுத்தவேண்டும் என்றும் பல்கலைக்கழக மாணவ சமுதாயமாக நாங்கள் வலியுறுத்துகின்றோம் என்றும் தெரிவித்துள்ளது.

# வரலாற்றுக் குருடர்களாக இருக்கும் அரசியல்வாதிகள்



நிலாந்தன்

"யாழ்ப்பாணம் இப்பொழுது வழிகாட்டியுள்ளது" இவ்வாறு 1931ஆம் ஆண்டு எழுதியவர் பிலிப் குணவர்த்தன. இப்பொழுது பிரதமராக உள்ள தினேஷ் குணவர்த்தனவின் தகப்பன் அவர். ஒரு இடதுசாரியாக இருந்தவர். 1931ஆம் ஆண்டு இலங்கைத்தீவின் முதலாவது தேர்தல் நடந்த பொழுது யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கிய, யாழ்ப்பாணம் வாலிப காங்கிரஸ் தேர்தலை பரிஷ்கரிக்குமாறு மக்களைக் கேட்டது. காந்தியின் செல்வாக்குக்கு உள்ளாகிய யாழ்ப்பாணம் வாலிப காங்கிரஸ் இலங்கை தீவுக்கு முழு சுயாட்சி வேண்டும் என்று கேட்டு அத் தேர்தலைப் புறக்கணித்தது.

அப்புறக்கணிப்பை தென்னிலங்கையில் உள்ள இடதுசாரிகள் பெருமளவுக்கு ஆதரித்தார்கள். அவ்வாறு ஆதரித்த இடதுசாரிகளில் ஒருவராகிய பிலிப் குணவர்தன அது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்பொழுது மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இக்குறிப்பு யாழ்ப்பாணம் யுத் காங்கிரசைப்பற்றி கலாநிதி சீலன் கதிர்காமர் எழுதிய நூலில் காணப்படுகின்றது.ஆனால் யாழ்ப்பாணம் வாலிப காங்கிரசை பின்பற்றி தேர்தல் புறக்கணிப்பை ஆதரித்த தென்னிலங்கை இடதுசாரிகள் கடைசி நேரத்தில் குத்துக்கரணம் அடித்து தேர்தலில் பங்குபற்றினார்கள் என்பது வேறு கதை.

யாழ்.வாலிப காங்கிரசின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் பெருமளவுக்கு வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்துக்கு வெளியில் ஓரளவுக்கு வாக்களிப்பு நடந்தது. வாலிபக் காங்கிரஸ் அவ்வாறு தேர்தலை புறக்கணித்தது சரியா பிழையா என்ற விவாதத்தில் இப்பொழுது இறங்கத் தேவையில்லை. ஆனால் கடந்த நூற்றாண்டில் இலங்கைத் தீவின் முதலாவது தேர்தலை எதிர்கொள்ளும் பொருட்டு யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கிய ஒரு இளைஞர் அமைப்பு "ப்ரோ ஆக்டிவாக" - செயல் முனைப்பாக ஒரு முடிவை எடுத்துப் புறக்கணித்தது என்பதுதான் இங்கு முக்கியமானது. காலனித்துவ அரசாங்கம் நடாத்திய முதலாவது தேர்தலை தமிழ்த் தரப்பு எவ்வாறு செயல்முனைப்போடு அணுகியது என்பதற்கு அது ஒரு எடுத்துக்காட்டு.

அங்கிருந்து தொடங்கி கடந்த சுமார் 83 ஆண்டுகால இடைவெளிக்குள் தமிழ்த் தரப்பு அவ்வாறு தேர்தல்களை செயல்முனைப்போடு கையாண்ட மேலும் ஒரு சந்தர்ப்பம் எதுவென்றால்,அது 2005ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலாகும்.

அப்பொழுது வன்னியில் ஒரு கருநிலை அரசை நிர்வகித்த விடுதலைப்புலிகள் இயக்கம் அந் தேர்தலை புறக்கணிக்குமாறு அழைப்பு விடுத்தது. அவ்வாறு தேர்தலை புறக்கணிப்பதன் மூலம் ரணில் விக்ரமசிங்கவுக்கு கிடைக்கக்கூடிய வாக்குகளை தடுப்பதே அந்த பகிஷ்கரிப்பின் நோக்கமாகும். ஏனென்றால் அப்பொழுது ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ஆட்சியில் இருந்தது. அந்த அரசாங்கம் நோர்வையின் அனுசரணையோடு ஒரு சமாதான முயற்சியை முன்னெடுத்து வந்தது. சமாதான முயற்சியை விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தருமர் பொறியாகவே பார்த்தது. எனவே அதில் இருந்து வெளிவருவதற்கு ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்க வேண்டும் என்று அந்த இயக்கம் சிந்தித்தது. அதன் விளைவாக தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழ் மக்களுக்கு கோரிக்கை விடுத்தது.

தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்திருந்தால் அவர்கள் தனக்கே வாக்களித்திருந்திருப்பார்கள் என்று ரணில் விக்ரமசிங்க இப்பொழுதும் நம்புகின்றார். தன்னுடைய வெற்றியைத் தடுத்து மஹிந்த ராஜபக்சவை ஆட்சிக்கு ஏற்றியதன் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானத்தை முறிக்க விரும்பியது என்றும் அவர் நம்புகிறார்.

அத்தேர்தலில் விடுதலைப்புலிகள் இயக்கம் அதாவது தமிழ்த் தரப்பு எடுத்த முடிவானது முன்பு யாழ்ப்பான வாலிப காங்கிரஸ் எடுத்த முடிவு போலவே செயல்முனைப்பானது. தேர்தலை தமிழ்நோக்கு நிலையில் இருந்து தந்திரோபாயமாக அணுகுவது.

அந்த பகிஷ்கரிப்பின் விளைவுகள் தமிழ் அரசியலின் மீது மட்டும் தாக்கத்தைச் செலுத்தவில்லை. அதற்குமப்பால் தென்னிலங்கை அரசியல், இந்த பிராந்திய அரசியல் என்று பல்வேறு பரிமாணங்களில் அந்த பகிஷ்கரிப்பின் விளைவுகள் அமைந்தன. அவற்றின் தொடர்ச்சிதான் இப்பொழுதுள்ள அரசியலும்.

இவ்வாறு தென்னிலங்கையில் இருந்து அறிவிக்கப்படும் ஒரு தேர்தலை செயல்முனைப்போடு அணுகும் மூன்றாவது முயற்சிதான் தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற கருத்துருவம் ஆகும்.

கடந்த 83 ஆண்டுகளிலும் மீண்டும் ஒரு தடவை தமிழ்த் தரப்பு ஒரு தேர்தலை நிர்ணயகரமான விதங்களில் எதிர்கொள்ளும் ஒரு முடிவு இது. முன்னைய இரண்டு சந்தர்ப்பங்களிலும் தமிழ்த் தரப்பு தேர்தலைப் புறக்கணித்தது. ஆனால் இம்முறை தமிழ்த் தரப்பு தேர்தலில் பங்குபற்றுகின்றது. அதன்மூலம் தமிழ் மக்களை ஒன்று திரட்ட முயற்சிக்கின்றது. தமிழ் மக்களை ஒரு திரண்ட அரசியல் ஆக்க சக்தியாக மாற்றுவதன்மூலம் தமிழ் மக்களுடைய பேரபலத்தை அதிகப்படுத்தி, இனப்பிரச்சினை தொடர்பான மேடைகளில் தமிழ் மக்களை ஒரு திரண்ட சக்தியாக நிறுத்துவது தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற கருத்துருவத்தின் முதல் நிலை நோக்கமாகும். தமிழ் மக்களை அகப்பெரிய திரட்சியாக மாற்றினால் அது பேச்சுவார்த்தை மேசையிலும், நீதி கோரும் மேடைகளிலும் தமிழ்மக்களை பலமான சக்தியாக மாற்றும். அந்த அடிப்படையில்தான் ஒரு பொது வேட்பாளர் நிறுத்தப்படுகின்றார்.

அந்த முடிவு தென்னிலங்கை வேட்பாளர்களின் மீது எவ்வாறான தாக்கத்தை செலுத்தியுள்ளது என்பதற்கு ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தரப்பைப் பேச அழைத்ததில் இருந்து விளங்கிக் கொள்ளலாம்.

ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தென்னிலங்கையில் மட்டுமல்ல தமிழ் பகுதிகளிலும் ஒரு பகுதி அரசியல்வாதிகளும் விமர்சகர்களும் கடுமையாக எதிர்ப்பைக் காட்டி வருகிறார்கள். தென்னிலங்கையில் யாரெல்லாம் தமிழ் வாக்குகளை கவர விரும்புகிறார்களோ அவர்கள் அனைவரும் பொது வேட்பாளரைக் கண்டு பதட்டமடைகிறார்கள்.

அவர்களுடைய தமிழ் முகவர்கள் எஜமானர்களை விட அதிகமாக பதறுகிறார்கள். தமிழ் வாக்குகள் கிடைக்கவில்லை என்றால் தமது தென்னிலங்கை எஜமானர்கள் திருப்தியூட்டும் வெற்றிகளைப் பெறத் தவறி விடுவார்கள் என்று அவர்களுக்கு பதட்டம். ஆனால் தமது தென்னிலங்கை எஜமானர்கள் தமிழ் மக்களுக்கு எதைத் தருவார்கள் என்பதனை அவர்களால் இன்று வரை தெளிவாகக் கூற முடியவில்லை.

கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டதுபோல, அவர்களில் யாருமே சமஸ்டியைத் தரப்போவதில்லை. அப்படி என்றால், அவர்கள் தரக்கூடிய சமஸ்டிக்கு குறைவான வாக்குறுதிகளை நம்பித்தான் அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும். அதாவது கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு வாக்குறுதிகளை தந்து விட்டு அவற்றை மீறிய, அல்லது உடன்படிக்கைகளை எழுதி விட்டு அவற்றை தாமாக முறித்துக் கொண்ட ஒரு தரப்பு இப்பொழுதும் வாக்குறுதியைத் தரும் என்று காத்திருப்பதை எப்படிப் பார்ப்பது? அவர்கள் வரலாற்றில் இருந்து எதையுமே கற்றுக் கொள்ளவில்லை. தத்துவஞானி ஹெகல் கூறுவது போல "வரலாற்றில் இருந்து நாம் கற்றுக் கொள்வது என்னவென்றால், மனிதர்கள் வரலாற்றிலிருந்து எதையுமே கற்றுக் கொள்வதில்லை என்பதைத்தான்." இவ்வாறு வரலாற்றுக் குருடர்களாக இருக்கும் அரசியல்வாதிகள் பொது வேட்பாளரை நிறுத்தும் தரப்பைப் பார்த்து முட்டாள்கள் என்கிறார்கள். அது ஒரு கேலிக்கூத்து என்கிறார்கள். அது ஒரு விஷப்பரீட்சை என்கிறார்கள்.

ஆனால் அவ்வாறு தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்க்கும் யாருமே இதுவரையிலும் எந்த தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் எதற்காக ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தைக் கூறவில்லை. இது ஒரு முக்கியமான விடயம். தமிழ்ப் பொது வேட்பாளர் பிழை என்று சொன்னால் தென்னிலங்கையில் உள்ள எந்த வேட்பாளர் சரி என்பதை அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

(11ஆம் பக்கம் பார்க்க)



தேசியம்

# இலங்கையில் தமிழர்கள் சித்திரவதைக்குள்ளாவதில் எந்த மாற்றமும் இல்லை

## ஐ.நா அறிக்கையில் சுட்டிக்காட்டுகிறது




**“தன்னிச்சையான கைதுகள், சட்டவிரோத கொலைகள், சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் இதர மனித உரிமை மீறல்கள் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன, என்பதையும் மேலும் அவை தீவிரமாக விசாரிக்கப்படு தவறிழைத்தவர்கள் தண்டிக் கப்படுவார்கள் எனவும், எவ்விதமான சந் தேகங்களுக்கும் இடமின்றி இராணுவம், புலனாய்வுத்துறை மற்றும் பொலிசாருக்கு வெளிப்படையாக அறிவுறுத்தி உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்”**

இலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற ஆறு மாதம் முதல் அடுத்த ஒன்றரை ஆண்டு காலத்தில் மாத்திரம் பாலியல் துஷ்பிரயோகம் உட்பட 3,000 குற்றச்சாட்டுக்களை இலங் கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு பதிவு செய்துள்ளது.

அதிர்ச்சியளிக்கும் தொடரும் துஷ்பிர யோகங்கள் குறித்த இந்த விவரங்கள் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணை யரின் சமீபத்தைய விரிவான அறிக்கையில் வெளியாகியுள்ளது.

“பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படை யினரால் சித்திரவதை மற்றும் மோசமாக நடத்தப்படுவது இலங்கையில் தொடர்ந்து இடம்பெறுகிறது “ என செப்டெம்பர் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 57வது கூட்டத் தொடருக்கான அறிக்கை தெரிவிக்கின்றது.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடு களின் உயர்ஸ்தானிகரின் வோகர் டர்க் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில், “நாட்டில் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அனுபவிப்பதில் தொலை நோக்கு பார்வையில் பாரதூரமான தாக் கத்தை ஏற்படுத்தக் கூடிய சில கவலையான போக்குள் காணப்ப டுகின்றன,” என சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டின் வடக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுடன் நடத்தப்பட்ட நேர் காணல்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தமக்கு அளித்த தகவல்களின் அடிப்படையில் இவை கண்டறியப்பட்டுள்ளதாக மனித உரிமைக ளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ் தானிகர் அலுவலகத்தின் அந்த அறிக்கை கூறுகிறது.

”கடந்த ஜனவரி 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலப்பகுதியில் சித்திரவதை குறித்த 2,845 முறைப்பாடு களும், இழிவாக நடத்தப்படுவது குறித்து 675 குற்றச்சாட்டுகளும் தமக்குக் கிடைத் ததாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு, மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலு வலகத்திற்கு தெரியப்படுத்தியது ” என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

“ஜனவரி 2023 மற்றும் மார்ச் 2024க்கு இடையில், சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் தொடர்பான 21 வழக்குகள், தடுப்புக் காவலிலிருந்த போது 26 பேர் உயிரிழந்த வழக்குகள் மற்றும் தன்னிச்சையான கைது மற்றும் தடுத்து வைக்கப்பட்டது தொடர்பாக 1,342 முறைப்பாடுகளும் தமக்கு கிடைத்ததாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரச தரப்பிலிருந்து தடுப்புக் காவலில் 2023இல் 14 பேரும் 2024இல் மூவரும் உயிரிழந்தனர் எனவும், மேலும் தடுப்புக் காவல் மற்றும் சுட்டுக்கொல்லப்படுவது ஆகியவற்றைத் தடுக்கும் நோக்கில் 2747/2023 இலக்கமிடப்பட்டு பொலிசாரால் விடுக்கப்பட்ட அறிக்கையும் மனித உரிமைக ளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டது.”

“அண்மையில் பிரதானமாக யாழ்ப் பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில், இலங்கை பாதுகாப்பு படையினரால் தமிழர்கள் கடத்தப்படுவது, சட்டவிரோத மாகத் தடுத்து வைக்கப்படுவது, மோசமாக நடத்தப்படுவது மற்றும் பாலியல் வன் செயல்களுக்கு ஆளாக்கப்படுவது ஆகிய அண்மைய குற்றச்சாட்டுகளை ஆராய்ந் தோம். இவை ஜனவரி 2024 முதல் கிடைத்தவை” என மனித உரிமைகளுக் கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகம் கூறுகிறது. அரசியல் எதிரிகள், நியாயத்திற்காகப் போராடுபவர்கள் மற்றும் சந்தேகத்தின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் கள் ஆகியோரே பிரதான இலக்காக இருந்துள்ளனர் என்பதை பலதரப்பிலிருந்து உறுதியாகியுள்ளதைக் காட்டும் ‘தெளிவான ஒரு பாணி வெளியாகியுள்ளது’ என அந்த அறிக்கை கூறுகிறது.

”தமிழர்கள், பிரதானமாகக் காணாமல் போனோர், காணி - சுற்றுச்சூழல் உரிமை கள் அல்லது போரில் பாதிக்கப்பட்டவர் களின் நினைவேந்தல் தொடர்பான போராட் டங்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் என நம்பப்பட்டவர்கள் கண்காணிக்கப்பட்டனர் அல்லது புகைப்படம் எடுக்கப்பட்டனர், பின்னர் பொலிஸின் குற்றத் தடுப்பு பிரிவினர் அல்லது பயங்கரவாத விசாரணைப் பிரிவின் உத்தியோகத்தர்கள் என தங்களை வாய்மொழியாக அடை யாளப்படுத்திக் கொண்டவர்களால் கைது செய்யப்பட்டார்கள்.”

அந்த வகையில், கண்கள் கட்டப்பட்டு அடையாளம் தெரியாத இடங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்ட அவர்கள் மூன்று தொடக்கம் ஐந்து நாட்கள் வரை விசாரிக் கப்பட்டதாகவும், பாதுகாப்பு படையினர் சித்திரவதை மற்றும் கொடூரமான, மனி தாபிமானமற்ற, அல்லது இழிவான முறையில் நடத்தப்படுவதற்கு பல்வகையான உத்திகளைக் கையாண்டதாகவும் தெரி விக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து நம்பத் தகுந்த தகவல்கள் கிடைத்துள்ளதாக மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் கூறப்பட் டுள்ளது.

“விசாரணையின் போது அல்லது தடுத்து வைக்கப்பட்டபோதோ தாங்கள் பாலியல் துஷ்பிரயோகம், விதைப்பைகளை அழுத்துவது, பலவந்தமாக நிர்வாணமாக் குவது, மார்பகங்களைக் கடிப்பது போன்ற பாலியல் சித்திரவதைகளை அனுபவித்ததாக பலர் கூறினர். அதுமாத்திரமன்றி அப்படி யான சித்திரவதை அனுபவிப்பதை நிறுத்து வதற்காக, தகவல்களைப் புனைந்து சொல் வது அல்லது ‘ஒப்புக்கொள்வது’, அல்லது அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு வாசிக்க இயலாத சிங்கள மொழியில் உள்ள ஆவணங்கள் அல்லது வெற்றுத்தாள்களில் கையொப்பமிடச் செய்வது ஆகியவற்றைச் செய்யும் நிலை ஏற்பட்டது எனவும் சிலர் கூறினர்.”

“அவ்வகையில் தொடர்ச்சியாக நடை பெற்ற சம்பவங்கள் காரணமாகத் தவறி ழைத்தவர்களின் பைகள் நிரம்பின. மேலும் பாதிக்கப்பட்டவர்கள் நாட்டைவிட்டுத் தப்பி யோடினர். போர் முடிந்த பின்னர் தொடர்ச் சியாக அதிகார துஷ்பிரயோகம் மற்றும் ஊழல் ஆகியவையும் அதைச் செய்த வர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாத சூழலும் தொடர்கின்றன.” என அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

“இறுதியாக குடும்ப உறுப்பினர் ஒருவர் இடைத்தரகர் மூலம் பாதுகாப்பு படையில் இருக்கும் யாராவது ஒருவருக்கு லஞ்சம் கொடுத்த பிறகு அவர்கள் இறுதியாக விடுவிக்கப்பட்டனர் என செவ்வி காணப் பட்ட பெரும்பாலானவர்கள் கூறினர். பின்னர் அவர்கள் இலங்கையிலிருந்து வெளி யேறினர்.”

எனினும், அரசாங்கமோ இந்த குற்றச் சாட்டுகளில் போதிய தகவல்கள் இல்லை என பதிலளித்ததாகவும், கடத்தல், சட்ட விரோதமாகத் தடுத்து வைக்கப்படுவது மற்றும் சித்திரவதை ஆகியவை குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து கவனத்திற் கொள் வதாகவும், விசாரணைகள் மற்றும் வழக் குகள் பதிவு செய்யப்படுவது குறித்து அர்ப்ப ணிப்புடன் செயற்படுவதாகவும் கூறியுள் ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இதேவேளை இலங்கை அரசு “தன் னிச்சையான கைதுகள், சட்டவிரோத கொலைகள், சித்திரவதை, பாலியல் வன் முறை மற்றும் இதர மனித உரிமை மீறல்கள் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன, என்பதையும் மேலும் அவை தீவிரமாக விசாரிக்கப்படு தவறிழைத்தவர்கள் தண்டிக் கப்படுவார்கள் எனவும், எவ்விதமான சந் தேகங்களுக்கும் இடமின்றி இராணுவம், புலனாய்வுத்துறை மற்றும் பொலிசாருக்கு வெளிப்படையாக அறிவுறுத்தி உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்” எனவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் வலியுறுத்தியுள்ளது.

# தமிழர்களின் நினைவுகூரலை நாங்கள் தடுக்க முடியாது!




## இலங்கைக்கு கனடா காட்டம்

கனடாவில் நிர்மாணிக்கப்பட்டு வரும், தமிழ் இனப்படுகொலை நினைவிடத்திற் கான கட்டுமானப் பணிகள் தொடர்பில் இலங்கையின் நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல என கனடாவின் பிரம்டன் நகர முதல்வர் பேட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அந்நாட்டு வெளிவிவகார அமைச்சருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், இலங்கைக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, பிரம்டன் நகரில் நிர்மாணிக் கப்படும் குறித்த நினைவுச் சின்னத்திற்கு இலங்கையின் எதிர்ப்பைத் தெரிவித்து, இலங்கைத் தூதரக அதிகாரி துஷார ரொட்ரிகோ, நகர முதல்வருக்கு கடிதம் எழுதி யிருந்தார்.

அத்துடன், இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியும் கனேடிய உயர் ஸ்தானிகரை அழைத்து இலங்கையின் எதிரப்பைப் பதிவு செய்திருந்தார்.

இந்நிலையில், இலங்கையின் தீர்மா னங்களை புறக்கணிக்க பிரம்டன் நகர சபை அதிகாரிகள் தீர்மானித்துள்ளதாக முதல் வர் பேட்ரிக் பிரவுன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில், தமிழ் சமூகம் தங்கள் அன்புக்குரியவர்கள் மற்றும் மாவீரர்களை நினைவுகூருவதைத் தடுக்க இலங்கை அரசாங்கம் முய ற்சி செய்யலாம். ஆனால் கனடா வில் அதைச் செய்ய முடியாது.

கனடாவில் நினைவேந்தல் நிகழ்வுக ளைத் தடுக்க முயல்வது உள்நாட்டு விவ காரங்களில் தலையீடு செய்யும் செயல் என்று அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப் பிட்டுள்ளார்.

# வங்கத்தில் விரட்டப்படும் இந்துக்கள்!




# இந்தியாவின் மௌனம் எதுவரை ?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

**முன்பு பங்களாதேஷில் 32 சதவீதமாக இருந்த இந்துக்களின் மக்கள் தொகை தற்போது 8 சதவீதமாக குறைந்திருக்கிறது. பங்களாதேஷின் 170 மில்லியன் மக்கள் தொகையில் 8 சதவீதமாக இருக்கும் இந்து மக்கள் தற்போது தொடர் வன்முறைக்கு உள்ளாகியுள்ளனர். முன்னாள் பிரதமர் ஹசீனா பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவுக்குத் தப்பிச் சென்றதில் இருந்து பல இந்துக்கள் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். இந்தியாவின் மேற்கு வங்கம், திரிபுரா, அசாம், மிசோரம், மணிப்பூர் ஆகிய மாநிலங்கள் பங்களாதேஷ் எல்லையில் அமைந்துள்ளன. இந்த மாநிலங்களின் எல்லைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான பங்களாதேஷ் இந்துக்கள் அகதிகளாக குவிந்து வருகின்றனர்.**

### சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள்:

கடந்த வாரத்தில், பல இந்துக்களின் வீடுகள், வணிக நிறுவனங்கள், கிட்டத்தட்ட 20 கோயில்கள் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டதாகவும் அல்லது எரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

ஆட்சி மாற்றத்திற்கு பிறகு, சிறுபான்மை சமூகங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு எதிராக அந்நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான இந்துக்கள் நாடு முழுவதும் உள்ள முக்கிய நகரங்களின் வீதிகளில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறுபான்மையின இந்துக்கள் மீது 52 மாவட்டங்களில் 205 தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளதாக இந்து அமைப்புகள் தெரிவித்துள்ளன.

தலைநகர் டாக்கா உட்பட பல்வேறு இடங்களில் வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. வன்முறையில் இருந்து தப்பிக்க ஆயிரக்கணக்கான இந்துக்கள் அண்டை நாடான இந்தியாவுக்குள் நுழையவும் முயன்று வருகின்றனர்.

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அரசாங்கம் அகற்றப்பட்ட பின்னர் பல வன்முறை சம்பவங்களைத் தொடர்ந்து அவர்கள் நீதி மற்றும் பாதுகாப்பைக் கோரி இந்த போராட்டத்தை நடத்தினர்.

### இந்திய அரசு தலையிட வேண்டுதல்:

தொடரும் வன்முறையின் விளைவாக, ஆயிரக்கணக்கான பங்களாதேஷ் இந்துக்கள் அண்டை நாடான இந்தியாவுக்கு தப்பிச் செல்ல முயன்றுள்ளனர். பங்களா தேஷின் இடைக்கால அரசாங்கத்தின் தலைவரான முஹம்மது யூனுஸ், இந்தத் தாக்குதல்கள் கொடூரமானது என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து வங்கத்தில் விரட்டப்படும் இந்துக்களின் நிலமை நீடிக்குமானால் இந்தியாவின் மௌனம் எதுவரை தொடரும் என்பதை யாரும் ஊகிக்க முடியாது.

சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களுக்கு இடைக்கால அரசு கண்டனம், தெரிவித்துள்ளதுடன்

“அவர்கள் இந்த நாட்டு மக்கள் இல்லையா? நாட்டைக் காப்பாற்ற முடிந்த உங்களால் சில குடும்பங்களைக் காப்பாற்ற முடியவில்லையா?” என்று முஹம்மது யூனுஸ் போராட்டக்காரர்களை நோக்கி கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் அனைத்து இந்து, கிறிஸ்தவ மற்றும் பௌத்த குடும்பங்களையும் பாதிப்பிலிருந்து பாதுகாக்குமாறு மாணவர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை பங்களாதேஷில் இந்துக்களுக்கு எதிரான தாக்குதலை, இந்திய அரசு தலையிட்டு இந்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என இந்தியாவில் உள்ள இந்து அமைப்புக்கள் கோரி யுள்ளன.

பங்களாதேஷ் நாட்டின் வளர்ச்சிக்கு பலவிதங்களிலும் இந்தியா துணை நின்று வருகிறது. பங்களாதேஷ் நாட்டில் நடப்பது இட ஒதுக்கீடு காரணமாக ஏற்பட்ட கலவரம் என முதலில் செய்திகள் தெரிவித்தாலும், அதன் பிறகு நடக்கும் சம்பவங்களை பார்க்கும்போது அதன் பின்புலம் வேறு மாதிரி இருக்கிறது. இந்துக்கள் மீது தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இந்துக்களின் நிறுவனங்கள் சூறையாடப்படுகின்றன. இந்த மனிதத்தன்மை அற்ற வெறிச் செயலை கண்டித்து இந்திய இந்து முன்னணி, மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் அவர்கள் இந்திய அரசிடம் உதவியை கோரியுள்ளார்.

### அமெரிக்கா தலையிட இந்திய எம்.பி கோரிக்கை:

வங்கத்தில் இந்துக்கள் மீதான தாக்குதலை நிறுத்த, அமெரிக்கா தலையிட இரு இந்திய வம்சாவளி எம்.பி.க்கள் வலியுறுத்தி உள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கனுக்கு மிச்சிகன் எம்.பி. ஸ்ரீதானேதர் வங்க தேசத்தில் இந்துக்களுக்கு எதிராக நடத்தப் படும் அட்டூழியங்களுக்கு எதிராக நான் மட்டுமல்ல சர்வதேச சமூகத்தினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.

வங்கதேசத்தின் இடைக்கால பிரதமராக முகம்மது யூனுஸ் பதவியேற்றுள்ள நிலையில், அந்நாட்டில் வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவர புதிய அரசுக்கு உதவி செய்ய வேண்டிய கடமை அமெரிக்க அரசுக்கு உள்ளது எனவும் கூறியுள்ளார்.

வங்கதேசத்தில் துன்புறுத்தப்பட்ட இந்துக்கள் மற்றும் பிற மத சிறுபான்மையினருக்கு அகதிகள் என்ற தற்காலிக பாதுகாக்கப்பட்ட அந்தஸ்தை அமெரிக்க நிர்வாகம் வழங்க வேண்டும்.

வங்கதேசத்திற்கு இது ஒரு சிக்கலான தருணம். வன்முறையை முடிவுக்கு கொண்டுவர அந்நாட்டு அரசுக்கு இயன்ற அனைத்து உதவிகளும் நாம் அளிக்க வேண்டும் என அமெரிக்க எம்.பி.ஸ்ரீதானேதர் கூறியுள்ளார்.

இதுபோல் வெளியுறவு அமைச்சர் பிளிங்கனுக்கு எம்.பி.ராஜா கிருஷ்ண மூர்த்தி எழுதியுள்ள கடிதத்தில், “வங்கதேசத்தில் முகம்மது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு பதவியேற்றுள்ள நிலையில் வன்முறையை முடிவுக்குக் கொண்டு வரவும், குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தவும் அவரது அரசுடன் அமெரிக்கா இணைந்து செயல்படுவது மிகவும் அவசரமாகும் என தெரிவித்துள் ளார்.

### இந்துக்களுக்கு எதிரான முன்னைய வன்முறை:

2021ஆம் ஆண்டில், இந்து பண்டிகையான துர்கா பூஜையின் போது மற்றும் அதற்குப் பிறகு வங்கதேசத்தில் இந்து சிறுபான்மையினரின் வீடுகள் மற்றும் கோயில்கள் மீது பல தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பல ஆண்டுகளாக இந்துக்களுக்கு எதிரான இதுபோன்ற தொடர்ச்சியான தாக்குதல்கள், வகுப்புவாத வன்முறைகள் அரங்கேறி உள்ளன. வீடுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

வங்கதேசத்தில் உள்ள சிறுபான்மையினரைப் பாதுகாக்க அரசு தவறிவிட்டதை இது காட்டுகிறது. என மனித உரிமைகள் குழுவான அம்னஸ்டி இன்டர்நேஷனல் கூறியுள்ளது.

சிறுபான்மையினரைப் பாதுகாக்க வங்க அரசு தவறிவிட்டது என்றும், பிரதமர் நாட்டை விட்டு வெளியேறிய பிறகு பங்களாதேஷில் உள்ள இந்துக்கள் பழிவாங்கும் தாக்குதல்களை எதிர்கொள் கின்றனர்.

தொடரும் வன்முறையில் இந்துக்கள் பலர் கொல்லப்பட்டதாகவும், மேலும் 40 பேர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. சுமார் 30 மாவட்டங்கள் மற்றும் உட்பிரிவுகளில் இருந்து இந்து எதிர்ப்பு வன்முறைகள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்திய எல்லைகளில் இந்து அகதிகள்

தாக்குதல்கள் அதிகரித்து வரும் நிலையில் பங்களாதேஷை சேர்ந்த இந்துக்கள், இந்தியாவுக்குள் நுழைய எல்லைகளில் குவிந்து வருகின்றனர். இதனால் இந்திய எல்லைகளில் பதற்றம் அதிகரித்துள்ளது.

பங்களாதேஷில் இடஒதுக்கீட்டு நடைமுறையை எதிர்த்து பல்வேறு போராட்டங்கள் நடந்தன. இதில் 560 பேர் உயிரிழந்தனர். நூற்றுக் கணக்கானோர் படுகாயமடைந்தனர். மாணவர்கள் போராட்டம் ஓய்ந்தாலும் பங்களாதேஷ் முழுவதும் இந்துக்கள் மீதும் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

சுமார் 17,000 இந்துக் குடும்பங்கள் வன்முறையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்துக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்துக்கள் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்த பங்களாதேஷ் இடைக்கால அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வதேச ரீதியாக பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேசியம்

## ஜனாதிபதித் தேர்தல் 2024

# தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் தேர்தல் அறிக்கை

தமிழ்த் தேசிய இனமானது கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக விடுதலைக்காகப் பல்வேறு வழிமுறைகளில் போராடி வருகிறது. இப் போராட்டத்தின் ஒரு வழிமுறையாகத், தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு ஆகிய நாம் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தியுள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பா.அரியநேத்திரன் அவர்கள் சங்குச் சின்னத்தின் கீழ் தமிழ்ப்பொது வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு என்பது , தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பாகும்.

தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆகிய ஏழு கட்சிகளும் தமிழர்தாயகத்தைச் சேர்ந்த அரசியற் செயற்பாட்டாளர்கள், கருத்துருவாக்கிகள், புத்திஜீவிகள், சிவில் சமூகங்கள், அரசசார்பற்ற அமைப்புகள், தொழிற் சங்கங்கள், கிராமமட்ட அமைப்புகள், தொழில்சார் அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகள், மாணவ அமைப்புகள் இணைந்து உருவாக்கிய மக்கள் அமைப்பாகிய தமிழ்மக்கள் பொதுச்சபையும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பே தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்பு ஆகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உள்ள மிகச்சிறு பகுதியினர் தவிர ஏனைய அனைவரும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகிறார்கள்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு எனப்படும் இந்தக் கூட்டணி கடந்த 15 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட கூட்டணிகளில் ஒப்பீட்டளவில் பெரிய அணியாகும். இது தமிழ் ஒற்றுமையின் புதிய நம்பிக்கையாகவும் எதிர்காலத் தமிழ் அரசியலுக்கான பலமான அடித்தளமாகவும் எழுச்சி பெறும்.

ஈழத் தமிழர்களாகிய நாம் இலங்கைத் தீவில் தனித்துவம் மிக்க ஒரு தேசிய இனமாகவும், தேசமாகவும் வாழ்ந்து வருகிறோம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட, மரபு வழித் தாயகத்தைக் கொண்ட, தனித்துவமிக்க பண்பாட்டைக் கொண்ட ஒரு தேசம் ஆவோம்.

இலங்கைத் தீவு பல்லின, பலமத, பல மொழி, பல் கலாசாரத்தைக் கொண்ட ஒரு தீவாகும். இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ள மறுத்ததன் விளைவே இனப்பிரச்சினை தோற்றம் பெறுவதற்கும் கூர்மை அடைவதற்கும் இறுதியில் விஸ்வரூபம் எடுப்பதற்குமான மூல காரணமாகும். தமிழ் மக்களுடைய தேசிய இருப்பை அழிக்கும் செயற்பாடுகளே இன அழிப்பாகும்.

தமிழர் தேசத்தின் இருப்பையும் தனித்துவத்தையும் அழித்து பெரும்பான்மை இனத்துடன் அதனைக் கரைக்கும் உள்நோக்கத்தோடு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது திட்டமிட்டு முன்னெடுத்த இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் முதலில் அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுத வழியிலும் போராடினார்கள். அப்போராட்டங்களை நிர்மூலமாக்கும் குறிக்கோளோடு ஏவி விடப்பட்ட அரச பயங்கரவாதத்தின் மிகக் கொடிய விளைவே இறுதிப் போரில் நிகழ்ந்த உச்சமான இன அழிப்பாகும்.

இந்தப் பின்னணியில் உலகின் மிகப்பெரிய தமிழ் சட்டமன்றமாகிய தமிழக சட்டமன்றம் இலங்கைத் தீவில் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்றது. இன அழிப்பு என்று ஏகமனதாகத் தீர்மானமாக நிறைவேற்றியது. வடமாகாண சபை அதை இன அழிப்பு என்று ஏகமனதான ஒரு தீர்மானமாக நிறைவேற்றியது. கனடாவில் பிரம்டன் நகர சபை அதை இன அழிப்பென்று ஏகமனதான ஒரு தீர்மானமாக நிறைவேற்றியது. கனேடிய நாடாளுமன்றம் மே பதினெட்டினைத் தமிழ் இனப்படுகொலை நினைவுகூரல் நாளாக ஏகமனதாக ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றியது. பிரான்சில் உள்ள நான்கு மாநகர சபைகளான Bobigny,Sevran,Choisy-Le-Roi,Vitry-Sur-Seine என்பன அது இன அழிப்பு என்று தீர்மானமாக நிறைவேற்றின. ஐக்கிய அமெரிக்கப் பிரதிநிதிகள் சட்டசபையில் (Congress) இந்த ஆண்டு மே15 அறிமுகப்படுத்தப்பட்ட 1230 தீர்மானமானது ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் நடத்தப்பட்டது இனஅழிப்பு என்பதை ஏற்றுக்கொள்கின்றது. ஈழத் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைக் காணும் பொருட்டு சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, அவர்கள் தங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்கு ஒரு பொது வாக்கெடுப்பு அவசியம் என்பதை அத்தீர்மானம் வலியுறுத்துகின்றது.

எனினும், இன்றுவரை இன அழிப்புக்கு பரிகார நீதியும் கிடைக்கவில்லை இன அழிப்புச் செயற்பாடுகள் நிறுத்தப்படவுமில்லை. மாறாக,

1 - திருகோணமலையில் தமிழர் மரபுரிமைச் சின்னங்கள் இருந்த இடங்கள் தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு அவ்விடங்கள் வேகமாக சிங்கள பௌத்த மயமாக்கப்படுகின்றன.

மேலும், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் அளவில் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு 26க்கும் அதிகமான விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சில பாரம்பரிய தமிழ்க் கிராமங்களை சிங்கள மாவட்டங்களுடன் இணைத்து வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பல நீதிமன்றத் தீர்ப்புகளை மீறுபவை. இனஅழிப்பு நடவடிக்கைகளால் அதிகம் விழுங்கப்பட்ட ஒரு மாவட்டம் இது.

2 - மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு புறம் சிங்கள பௌத்த மயமாக்கல் நடந்து வருகிறது. இன்னொரு புறம் நிலப்பறிப்பு தொடர்கிறது. உதாரணமாக 3000 குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான கால்நடை சார்ந்த பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கத்தோடு மயிலத்தமடு, மாதவனை போன்ற இடங்களில் மேய்ச்சல் தரைகளை அரச அனுசரணையோடும் பாதுகாப்போடும் சிங்கள விவசாயிகள் ஆக்கிரமித்து வருகிறார்கள். இங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகள் மீறப்படுகின்றன.

வாகரை. கதிரவெளியில் கனிமவள அகழ்வு மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படுகின்றது. வாகரையில் இறால் பண்ணைகள் மக்களுடைய எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படுகின்றன. இவ்விரண்டு விடயங்களும் மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதிப்பவை. சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு எதிரானவை.

3 - அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவை முழுமையான ஒரு பிரதேச செயலர் பிரிவாகத் தரம் உயர்த்துமாறு தமிழ்மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். இன்றுவரை ஆட்சிக்கு வந்த எந்த ஓர் அரசாங்கமும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை. இனஅழிப்பு நடவடிக்கைகளால் அதிகம் விழுங்கப்பட்ட மற்றொரு மாவட்டம் இது.

4 - வடக்கில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் குருந்தூர் மலை, வெடுக்கு நாறிமலை, நீராவியடி ஆகிய இடங்களில் தமிழ் மரபுரிமைச் சின்னங்கள் அமைந்திருக்கும் சிறுமலைகளில் அரச திணைக்களங்களும் பிக்குகளும் அரச படையினரும் பௌத்த கட்டுமானங்களை உருவாக்கி வருகிறார்கள். அங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகள் மீறப்படுகின்றன. இக்கட்டளைகளைவழங்கியஒருநீதிபதி நாட்டைவிட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அதற்காக வெட்கப்படவேண்டிய அரசாங்கம் அவரைத் தனிப்பட்ட முறையில் சிறுமைப்படுத்தியது.

முல்லைத்தீவில் உள்ள கொக்குத்தொடுவாயில் மேற்கொள்ளப்படும் மனிதப் புதைகுழி அகழ்வானது பன்னாட்டு நிபுணர்களின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறவில்லை.

யுத்தம் முடிவடைந்த பின்னர் முல்லைத்தீவில் மட்டும் 67 பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் பொதுமக்கள் மற்றும் இராணுவம் இடையிலான விகிதம் 2:1 ஆக இன்னமும் இருக்கின்றது. சுமார் 100க்கும் மேற்பட்ட படையினர் முகாம்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் அமைக்கப்பட்டுள்ளன.

5 - வவுனியா மாவட்டத்தில் கொக்கச்சான் குளம் என்ற தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் குடியிருப்பு இராணுவப் பாதுகாப்புடனும் அரச அனுசரணையுடனும் ஆக்கிரமிக்கப்பட்டு 'கலாபோபஸ்வேவ' என்ற பெயருடைய சிங்களக் கிராமமாக மாற்றப்பட்டு மிகக்குறுகிய காலத்துக்குள் அந்த கிராமத்துக்குத் தேவையான சகல உட்கட்டுமான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, அம்பாந்தோட்டையிலிருந்துகொண்டுவரப்பட்டவர்களை அரசின் அனுசரணையோடு குடியமர்த்தி 'நாமல்கம' என்ற ஒரு கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

6 - மன்னார் மாவட்டத்தில், கனிம வளம் பறிக்கப்படுகின்றது. அங்குள்ள முள்ளிக்குளம் கிராமத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கும் ஸ்ரீலங்கா கடற்படையானது அக்கிராமத்தின் பூர்வ குடிகளான தமிழ் மக்களை அங்கு முழுமையாக மீளக் குடியமர விடாமல் தடுத்து வருகின்றது.

மன்னார் புதைகுழி தொடர்பான உண்மைகள் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை

7 - கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழர் மரபுரிமைச் சொத்துகளை தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்து வருகின்றது.

8 - யாழ்ப்பாண மாவட்டத்தில் படைத்தரப்பு முகாம்களை அமைத்திருக்கும் பெரும்பாலான காணிகள் தனியாருக்குரியவை. இவற்றுள் மிகச்சிறிய நிலப்பரப்புத்தான் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்திலும் தமிழர் மரபுரிமைச் சொத்துக்கள் பல ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள பௌத்த மயமாக்கப்பட்டுள்ளன.

நாவற்குழியில் அரசின் அனுசரணையோடு ஒரு சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தையிட்டியில் தனியார் காணியில் சட்டவிரோதமாக ஒரு புதிய விகாரை படையினரால் கட்டப்பட்டுவிட்டது.

9 - தமிழர் தாயகம் எங்கும் தனியார் காணிகள் படையினரால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே அபகரிக்கப்பட்ட தனியார் காணிகள் பல இதுவரை விடுவிக்கப்படவில்லை. ஆனால் பெரும்பகுதி விடுவிக்கப்பட்டு விட்டதாக அரச புள்ளி விபரங்கள் பொய் கூறுகின்றன.

தமிழர் தாயகமெங்கும் வனவளத் திணைக்களமும், வனஜீவராசிகள் திணைக்களமும் காடுகளின் பாதுகாப்பு, வனஉயிரினங்களின் பாதுகாப்பு என்ற பெயரில் தனியார் காணிகள், பயிர்ச்செய்கை நிலங்கள், வணக்கத்தலங்கள் உள்ளடங்கிய பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் அளவு நிலத்தை அபகரித்து வைத்திருக்கின்றன.

மேற்குறிப்பிடப்பட்டவை சில உதாரணங்கள் மட்டுமே. கடந்த 15 ஆண்டுகளாக நிலப்பறிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் அரசுக் கொள்கையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

10 - புனர்வாழ்வின் பின் விடுவிக்கப்பட்ட முன்னாள் இயக்கத்தவர்கள் 15 ஆண்டுகளின் பின்னரும் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களின் மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள்.

11 - தமிழ் மக்களின் அரசுக்கு எதிரான செயற்பாடுகளைப் பயங்கரவாதமாகச் சித்திரிக்கக்கூடிய வாய்ப்புகளைக் கொண்டிருக்கும் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்தும் தமிழ் மக்களின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது

**12** - அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. மாறாக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுவது முழுமையாக நிறுத்தப்படவும் இல்லை.

**13** - மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், அரசியற் செயற்பாட்டாளர்கள் மீதான அடக்கு முறைகளும் அச்சுறுத்தல்களும் தொடர்கின்றன.

**14** - வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வருகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கான சர்வதேச தினமாகிய கடந்த ஓகஸ்ட் முப்பதாம் திகதியன்று திருகோணமலையில் நடந்த எதிர்ப்பு பேரணியில் கலந்து கொண்ட உறவினர்கள் மற்றும் அரசியற் செயற்பாட்டாளார்கள் மீது அரச பயங்கரவாதமானது போலீஸ் நடவடிக்கை என்ற வடிவத்தில் ஏவி விடப்பட்டது. நீதிமன்ற கட்டளையின் கீழான இச்சட்ட நடவடிக்கை மூலம் அப்பேரணி குலைக்கப்பட்டது.

இவ்வாறு கட்டமைக்கப்பட்ட இன அழிப்புச் செயற்பாடுகள் தமிழர் தாயகமெங்கும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களின் தாயகத்தின் நிலத் தொடர்ச்சியைத் துண்டாடுவது, இன விகிதாசாரத்தைக் குறைப்பது, நிலத்தைப் பறிப்பது, தமிழ் மரபுரிமைச் சின்னங்களை அழிப்பது, அங்கே சிங்கள பௌத்த மரபுரிமைச் சின்னங்களை ஸ்தாபிப்பது போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் வெவ்வேறு வடிவங்களே.

இந்த நடவடிக்கைகள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாத தன்மையைக் கொண்டவை. ஸ்ரீலங்கா அரசு என்ற மையத்திலிருந்து உள்நோக்கத்துடன் திட்டமிடப்படுகின்றவை. தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனவளத் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் ஆக்கிரமிப்பைப் பகலில் சட்டரீதியாகச் செய்கின்றன. பிக்குகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் முன்னணியில் நிற்கிறார்கள். அவர்கள் சட்டத்தையோ நீதிமன்றத்தையோ காவல்துறையையோ மதிப்பதில்லை. படையினர் இரவுகளில் பௌத்த கட்டுமானங்களை இரகசியமாகக் நிர்மாணிக்கின்றார்கள்.

நிலப்பறிப்பு, சிங்களபௌத்தமயமாக்கல், அரசின் அனுசரணையுடனான குடியேற்ற நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளில் படைத் தரப்பு ஒரு சமாந்தரமான அரசைப் போல செயற்படுகின்றது. அதில் வடக்கு கிழக்கில் மட்டும் 65,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது

இனவழிப்புச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் அதேவேளை நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைதான் உண்டு என்று பொய்யான தோற்றத்தைக் கட்டியெழுப்பி பன்னாட்டு சமூகத்தை நம்ப வைக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமறுத்து இன அழிப்பு யுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுத்த காரணத்தாலேயே நாடு கடனாளியாகியது. எனவே, இப்பொழுது நாட்டை பிடித்துலுப்பும் பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம் யுத்தத்திற்காகப் வாங்கிய கடன் சுமைதான்.

இப்பொழுது தென்னிலங்கையில் வேட்பாளர்களாகக் களமிறங்கியுள்ள அனைவரும் பொருளாதார நெருக்கடி எனப்படுவது இனப்பிரச்சினையின் விளைவுதான் என்பதனை மறைக்கின்றனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கமுடியாது என்ற ஆழமான உண்மையை எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய பரப்புரையின் குவிமையமாக இருப்பது நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து எப்படி மீட்டெடுப்பது என்பதுதான். இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காகத் தமிழ் மக்களால் ஏற்கத்தக்க பொருத்தமான முன்மொழிவு எதனையும் அவர்களில் யாரும் இதுவரை முன்வைக்கவில்லை.

யுத்த தளபாடங்களுக்காக முன்பிருந்த அரசாங்கங்கள் 25000 கோடி அமெரிக்க டொலர்களைச் செலவழித்துள்ளதாக இந்திய பாதுகாப்புத்துறை சார்ந்த ஒரு நிபுணரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்தப் பணத்தைச் செலவழித்து முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட உயிரழிவு, பொருள் அழிவைக் குறித்து இதுவரையிலும் உத்தியோகபூர்வ மதிப்பீடு எதுவும் இலங்கை அரசாங்கத்தால் செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த அழிவுகளில் இருந்து தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்கான எந்த ஒரு சிறப்பு செயல்திட்டமும் இன்றுவரையிலும் உருவாக்கப்படவுமில்லை.

யுத்தத்துக்காகப் படையினரின் ஆட்தொகை பல இலட்சமாக அதிகரிக்கப்பட்டது. இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 40 விகிதம் படையினருக்கே செலவழிக்கப்படுகிறது. இலங்கைத்தீவின் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் மொத்தச் சம்பளத்தில் ஏறக்குறையச் சரிபாதி படையினருக்கான சம்பளமாக வழங்கப்படுகிறது.

கடந்த 15 ஆண்டுகளிலும் படைத்தரப்பின் ஆட்தொகை குறிப்பாக வடக்கு கிழக்கில் குறைக்கப்படவில்லை. அதாவது இராணுவமய நீக்கம் நிகழவில்லை. மாறாக, தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழர் தாயகத்தை சிங்கள பௌத்த மயப்படுத்தும் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்காகவே படைத்தரப்பு பெருஞ் செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான இராணுவ பொருளாதாரச் சூழலுக்குள் புலம்பெயர்ந்த தமிழர்கள் முதலீடு செய்யத் தலைப்பட்டமாட்டார்கள். அண்மைக் காலங்களில் அதிகரித்த அளவில் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வருகிறார்கள்.தற்போது புலம்பெயர்பவர்கள் படித்தவர்கள்: சமூகத்தில் பொறுப்பான பதவிகளை வகித்தவர்களே. இப்படிப்பட்ட தலைமை தாங்கும் தகைமையுள்ள படித்தவர்கள் சமூகத்தில் இருந்து வெளியேறுவது எதிர்காலத்தில் தமிழ் மக்களின் அரசியலில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இவ்வாறான இராணுவப் பொருளாதார சூழலுக்குள் தமிழ் மக்கள் மத்தியில் கூட்டுணர்வையும் நம்பிக்கையையும் தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்ப வேண்டியது அவசியம். அதேசமயம் இனப்பிரச்சினைக்கான தீர்வின் அவசியத்தையும் அவசரத்தையும் தென்னிலங்கைக்கும் உலக சமூகத்துக்கும் நிராகரிக்கப்பட முடியாத விதத்தில் உணர்த்த வேண்டியதும் அவசியம்.

தமிழ் மக்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைகள்தான் உண்டு என்று தொடர்ச்சியாக ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் கூறிவரும் ஒரு பின்னணியில் இனப் பிரச்சினையைப் பேசுபொருளாக்கி அதன்மீது தென்னிலங்கையின் கவனத்தையும் உலகத்தின் கவனத்தையும் ஈர்க்கும் நோக்கத்தோடு, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினராகிய நாம் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளராக திரு.பாஅரியநேத்திரன் அவர்களை முன் நிறுத்துகிறோம்.

கடந்த 46 ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் யாரோ ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களித்து வந்திருக்கிறார்கள். 2009க்குப் பின் 3 ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ்மக்கள் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு வாக்களித் திருக்கிறார்கள். இவர்களில் வென்றவர்களும் சரி தோற்றவர்களும் சரி இன்றுவரையிலும் இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்வைத் தரவும் இல்லை இன அழிப்புச் செயற்பாடுகளை நிறுத்தவும் இல்லை.

கடந்த 46 ஆண்டுகளாக ஜனாதிபதித் தேர்தல்களில் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு பதில் வினையாற்றும் அணுகுமுறையில் இருந்து வேறுபட்டு இந்த முறை தமிழ்மக்கள் செயல்முனைப்போடு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது என்று எடுக்கப்பட்ட முடிவின் விளைவே தமிழ்ப் பொது வேட்பாளர் ஆகும்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தமிழ் மக்களை ஓரணியாகத் திரட்டுவார். அதேசமயம், இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கித் தமிழ் மக்களின் கூட்டு விருப்பத்தை உலக சமூகத்துக்கும் தென்னிலங்கைக்கும் வெளிப்படுத்துவார். இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியையும் கோருவார்.

இந்த அடிப்படையில், தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பானது இனப் பிரச்சனைக்கான நிரந்தர தீர்வானது பின்வரும் அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று உறுதியாக வலியுறுத்துகின்றது.

**1** - இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தோடு உருவாக்க வேண்டிய இலங்கைத்தீவின் புதிய யாப்பானது தமிழ் மக்களை இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**2** - தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால்தான் இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்தலாம். எனவே புதிய யாப்பு ஆனது இலங்கைத் தீவின் பன்மைத் தேசியப் பண்பை உறுதிப்படுத்தும் விதத்தில் தேசங்களின் ஒன்றிணைவாக அமைய வேண்டும். அதாவது புதிய யாப்பானது இலங்கைத் தீவு ஒரு பன்மைத் தேசிய அரசாகக் (Plurinational State) கட்டமைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

**3** - ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்த ஒரு அரசியல் தீர்வாலும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை ஒருபோதும் திருப்திப்படுத்த முடியாது.

**4** - இந்த விடயத்தில் தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதனை தாமே நிர்ணயிப்பதற்குப் பொருத்தமான பன்னாட்டு ஏற்பாடுகளைக் கோருவதற்கு உரித்துடையவர்கள்.

**5** - தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அலகானது ஒன்றிணைந்த தற்போதைய வடக்கு கிழக்கு மாகாணங்களை எல்லையாகக் கொண்டு அமைய வேண்டும். குறித்த சுயநிர்ணய அலகிற்குள் முஸ்லீம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்த மனதோடு பேச்சுவார்த்தை நடாத்த தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புத் தயாராக உள்ளது.

**6** - மலையகத் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்பட வேண்டும். மேலும் உடனடி பிரச்சினைகளுக்கு அவர்கள் தொடர்ச்சியாகக் கோரி வரும் தீர்வுகளும் வழங்கப்பட வேண்டும். இத்தீர்வுகளுக்கான போராட்டத்தில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது மலையகத் தமிழர்களோடு தோளோடு தோள் நிற்கும்.

**7** - ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு நடத்திய இன அழிப்பு, போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப்புக்கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டு, பரிகார நீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகள் மீள நிகழாமையை உறுதி செய்ய வேண்டும். இதுவரையிலுமான ஐநா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் தொகுக்கப்பட்ட அனு பவமாக ஐநா பொதுச் செயலர் பொறுப்பு கூறலை ஐநா பொதுச் சபையிடம் பாரப்படுத்துவதன் மூலம் இன அழிப்புக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்களிடம் பாரப்படுத்த வேண்டும்.

**8** - அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நிலப்பறிப்பைத் தடுக்கவும், நமது வளங்கள் இன அழிப்பின் ஒரு பகுதியாகச் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் தமிழர் தாயகத்தின் தேசிய வளங்களை இயற்கையின் சமநிலை குலையாத வகையில் வினைத்திறனுடன் பயன்படுத்தவல்ல தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்புக்களை நாம் உருவாக்க வேண்டும்.

இதற்கேற்ற வகையில் தமிழர் தாயகத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீடுகளையும் உள்வாங்கும் அதிகாரம் தமிழர் தேசத்துக்கு இருக்க வேண்டும்.

**9** - தமிழ்க் கடலில் தமிழ் மீனவர்களுடைய கடல் இறைமை உறுதி செய்யப்பட வேண்டும்.

**10** - ஒரு நிரந்தரத் தீர்வைக் கண்டடைவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத்தோடும், தமிழர் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும் போரினால்

*(11ஆம் பக்கம் பார்க்க)*

# அனைத்துலக அரங்கில் தமிழர் உரிமைக்கு போராடிய



# விராஜ் மெண்டிஸ்

"உண்மையான விடுதலையை நேசித்தவர்கள் எல்லோரும் தமது உயிரைக் கொடுத்துவிட்டனர் அவர்களுக்காகவே நான் செயற்படுகிறேன்," என்று எமக்கு அடிக்கடி நினைவுபடுத்திய அவர் இப்போதிருக்கும் நிலைகெட்ட புலம்பெயர்ச் செயற்பாட்டுத் தளத்துக்கு அப்பால் ஈழத் தமிழர் விடுதலை அரசியலை 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரும் நகர்த்துவதில் மிகுந்த முயற்சியெடுத்துச் செயற்பட்டுக் கொண்டிருந்தார் என்று விராஜ் மெண்டிஸ் அவர்களுக்கான அஞ்சலிக்குறிப்பில் அவரது நண்பர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

ஈழத்தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தின் உற்ற நண்பனாக மிக நீண்ட காலமாக, தனது சாவுப்படுக்கை வரையும், ஜேர்மனி நாட்டின் பிரேமன் நகரிலிருந்து தொடர்ச்சியாக இயங்கிவந்த விராஜ் மெண்டிஸ் ஈழத் தமிழர்களிடமிருந்து தனது 68ஆவது வயதில் நிரந்தரமாக விடைபெற்று விட்டார். அவரது வலிய நெஞ்சுரத்தோடு இளகிய குழந்தை மனது எப்போதும் போட்டியிட்டுக் கொண்டிருக்கும்.

ஈழத் தமிழர் மீதான சிங்களப் பேரினவாத அரசின் பௌதிக இன அழிப்பு ஆரம்பிக்கப்பட்ட 1956 ஆண்டில் விராஜ் மெண்டிஸ் பிறந்தார். அதுவே இன அழிப்பின் 68 ஆண்டு வரலாற்றுக்காலமுமாகும்.

தமிழ் மக்களின் விடிவிற்கான செயற்பாடுகளுக்குப் பெரும்பங்காற்றி இயங்கிய வரும், அனைத்துலக மனித உரிமைகள் அமைப்பின் தலைமை இயக்குநருமாகிய விராஜ் மெண்டிஸ் அவர்கள் 16 ஆகஸ்ட் 2024 அன்று காலமானார்.

ஜேர்மன் பிரமனிலுள்ள பன்னாட்டு மனித உரிமைகள் அமையம் ஒன்றினைத் தளமாகக் கொண்டு செயற்பட்டு வந்த இவர் தமிழர் விடுதலைப் போராட்டத்தை ஏற்றுக்கொண்டு நீண்டகாலமாக பயணித்தவர்.

2009 தமிழினவழிப்பின் பின்பாக தமிழரிற்குக் கிடைக்கக் கூடிய தீர்வை நோக்கி மாறுபடாத கருத்துக் கொண்டு செயற்பட்டவர். விராஜ் மெண்டிஸ் அவர்கள் 1984ஆம் ஆண்டிலிருந்தே தமிழர் விடுதலைப் போராட்டத்துடன் உடனிருந்து செயற்பட்டு வந்தவர்.

2009 போரிக்குப்பின்னர் பாரிய அநீதி தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதற்கான முதல் அடியை உலகம் எடுத்து வைக்கத் தயாராக இருக்கின்றது என்ற செய்தியை நாம் முன்னெடுக்கும் செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களுக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் சொல்ல வைத்தவர் விராஜ் மெண்டிஸ்.

புலம்பெயர்நத ஈழத்தமிழ் மக்கள் சமூகத்துக்கு முற்றிலும் வெளியே இருந்து, இந்த முயற்சி எடுக்கப்படுகிறது என்பதை அவர் வலியுறுத்தினார். தமிழர் போராட்டத்தை பன்னாட்டளவில் முடக்கிய வேளையில் அதை எதிர்த்து அரசியல் அடிப்படையிலும் சட்ட அடிப்படையிலும் தொடர்ந்து போராடியவர்களில் விராஜ் மெண்டிஸ் முதன்மையானவராவார்.

சுவிஸ் அரசானது பல தமிழர் அமைப்பு செயற்பாட்டாளர்களை கைது செய்தபோது அதை எதிர்த்து இவர் தீவிரமாகப் போராடினார். தமிழ் அமைப்புகள் குற்றச் செயல்களில் ஈடுபடும் அமைப்பு அல்ல மாறாக தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுவதை முதன்மை நோக்காகக் கொண்ட விடுதலை அமைப்பு" என்று சுவிசின் உச்ச நீதிமன்றமானது 2018ஆம் ஆண்டு தீர்ப்பளித்ததற்குப் பின்னால் விராஜ் மெண்டிசின் கடுமையான உழைப்பு இருக்கிறது.

"டேவிட் கமரூனுடன் தேனீர் அருந்துவதைப் பாரிய அடைவாகக் கொள்பவது நகைப்பிற்கிடமானது. உங்களால் அவர்களை மாற்ற முடியாது. மாறாக, மேற்குலகின் அதிகார நடுவங்கள் தான் தமிழர்களை ஏமாற்றி, திசைமாற்றி தமிழர் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து விலகச் செய்யும்" என்று இடித்துரைப்பதன் மூலம் மேற்குலகின் சூழ்ச்சிக்குத் தமிழர் பலியாகக் கூடாது என்று தமிழர்களிடத்தில் எச்சரிக்கை உணர்வை விராஜ் மெண்டிஸ் ஏற்படுத்தி வந்தார்.

ஐரோப்பாவில் தமிழ் ஏதிலிகளையும் தமிழர் விடுதலைக்குப் பங்காற்றுபவர்களையும் சிறிலங்காவிற்கு நாடுகடத்த அந்தந்த நாடுகளால்எடுக்கப்படும்முயற்சிகட்கெதிராகப் போராடி அம்முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதில் முன்னின்று உழைத்த விராஜ் மெண்டிஸ் மீது புலம்பெயர்ந்த தமிழர்கள் அளவற்ற மதிப்பும் பற்றும் என்றும் வைத்திருக்கின்றனர்.

தமிழர் விடுதலைப் போராட்டத்தையும் அதன் தலைமையையும் கருத்து மாறுபாடின்றி நேசிக்கும் நல்லதொரு சிங்களத் தோழராக, போராடும் தோழனாக எம்முடன் உறுதியாகப் பயணித்த விராஜ் மெண்டிசின் உழைப்பைத் தமிழர் என்றும் மனங் கொள்ள வேண்டும்.

சிங்கள இனத்தவர்கள் மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ஆர்வலர்களால் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. உரோம் நகரைத் தளமாகக் கொண்டு இயங்கும் நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தைத் (Permanent People's Tribunal – PPT) தொடர்பு கொள்வதே இவ்விடயத்தில் சிறந்த முன்னெடுப்பாக இருக்கும் என்று முனைவர் அன்டி ஹிகின் பொட்டம் (Dr. Andy Higginbottom) என்பவர் சுட்டிக்காட்டினார்.

வியட்நாமில் முன்னெடுக்கப்பட்ட 'ரஸல் - சாத்ர' (Russell/Sartre) தீர்ப்பாயத்தின் பாரம்பரியத்தின் வழியில், தொடர்ந்து செயற்படும் இத்தீர்ப்பாயம், உலக அதிகார சக்திகளின் செல்வாக்குக்கு அப்பாற்பட்டது என்றும், அதேநேரம், அறநெறிக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்ளவல்லது என்றும் முனைவர் ஹிகின்பொட்டம் வாதிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு நடைமுறை உறுப்பினராக அயர்லாந்து இருந்ததனாலும், ஆரம்பத்தில் சிறீலங்காவில் சமாதானத்தை அது ஊக்குவித்ததாலும், காலனீயத்துக்கு எதிரான வரலாற்றை அது கொண்டிருந்ததன் காரணத்தினாலும் அதன் தலைநகரான டப்ளின் நகரத்தில் (Dublin) தீர்ப்பாயத்தின் முதல் அமர்வு 2009இல் நடைபெற்றது.

நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான நம்பகமான சூழலை இலங்கை சமாதானத்துக்கான அயர்லாந்து மன்றமும், பிரேமன் பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்பும் இணைந்து மேற் கொண்டன. சிறீலங்காவுக்கான மக்கள் தீர்ப்பாயத்தின் முதல் அமர்வுக்கு வேண்டிய நிதியும், வளங்களும் தமிழர் அல்லாத அமைப்புகளிடமிருந்தே வரவேண்டும் என்பதை விராஜ் வலியுறுத்தினார்.

விராஜ் மெண்டிஸ் அவர்கள் தனது வாழ்நாளின் பெரும்பகுதியை தமிழர்க்காகவும், தமிழர் உரிமைக்காகவும், தமிழர் விடுதலைக்காகவும் தன்னை அர்ப்பணித்து பல தசாப்த காலங்களாக பன்முக ஆற்றலோடு அனைத்துத் தளங்களிலும் முன்னின்று பங்காற்றியவர். அவரது இழப்பானது தமிழினம் ஈடுசெய்ய முடியாத ஒன்றாக அமைந்துள்ளது. தனது இறுதி மூச்சுவரை தமிழர் உரிமைக்காகவே வாழ்ந்தவர். எந்த இக்கட்டான நெருக்கடியிலும் சுயாதீனமாக இயங்கும் வல்லமைக்கு அவர் ஓர் எடுத்துக் காட்டு.

பிரித்தானியாவில் இருந்து ஒரு காலத்தில் அவர் விரட்டப்பட்டதன் பின்னரும், அவரது பிரித்தானியத் துணைவியாரான காரன் அம்மையார், தனது நாட்டைத் துறந்து அவரோடு ஜேர்மனியில் தானும் சேர்ந்து வாழ்ந்து, தோழர் விராஜின் செயற்பாட்டை ஈழத்தமிழர் விடுதலைக்காகத் தொடர்ந்தும் குவியப்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்தமை நெஞ்சை நெகிழவைப்பது.

விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாயிருப்பினும் மலைநிகர்த்த செயலாற்றலோடு அவரோடு நெருக்கமான நண்பர்களாகச் செயற்படும் புலம்பெயர் சிங்கள நண்பர்கள் அவரின் பிரிவால் ஆழ்ந்த துயருக்குள்ளாகியுள்ளனர். கோட்பாட்டு ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் ஈழத்தமிழர் தேசக் கட்டலையும் விடுதலை அரசியலையும் அசைக்கவியலாது தாங்கியிருந்த தூண்களில் ஒன்று விராஜ். விராஜ் மரணிக்கலாம், அவர் நாட்டிய அந்தத் தூண் ஒருபோதும் சரியாது. விராஜ் விட்டுச் சென்றிருக்கும் நிரப்பவியலா இடைவெளியை ஈடுசெய்வது அவரது வாழ்வுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்தமான ஈழத்தமிழர் விடுதலைக்கும் அர்த்தம் தருவதாகும்.

**"உங்களால் அவர்களை மாற்ற முடியாது. மாறாக, மேற்குலகின் அதிகார நடுவங்கள் தான் தமிழர்களை ஏமாற்றி, திசைமாற்றி தமிழர் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து விலகச் செய்யும்"**



# வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற தமிழ் மக்களுக்கு வாய்ப்பு!



## தமிழர் விடுதலைக் கூட்டணி எடுத்துரைப்பு

தமிழ் மக்கள் அனைவரும் சங்குச் சின்னத் திற்கு வாக்களித்து தமது வரலாற்று கடமையை நிறைவேற்ற வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் பரமசிவம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"எம் அன்புக்கினிய தமிழ் மக்களே! ஈழத் தமிழர்கள் கடந்த 15 ஆண்டுகளாக அரசியல் அனாதைகளாக அலைந்து திரிகிறார்கள்.

தேர்தலில் வாக்குறுதி கொடுத்த யாருமே அதன் பின்னர் எம்மை மதித்ததில்லை. இம்முறை எமக்கு ஒரு புதிய தெம்பு பிறந்துள்ளது.

வெற்றி பெறப்போவதில்லை எனத் தெரிந்து கொண்டே நாம் ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்கப் போகிறோம். ஏன் தெரியுமா? நாம் நம்பிய அனைவரும் எம்மைக் கைவிட்ட போதும், நாம் எமது உரிமைகளுக்கான போராட்டத்தைக் கைவிடவில்லை என்பதையும், அதற்காகப் போராடும் எமது உணர்வுகளை இன்னும் இழந்து விடவில்லை என்பதையும் அத்துடன் எமது வலிகளையும் வேதனைகளையும் இந்த உலகுக்கு உரக்கச் சொல்லப் போகிறோம்.

வெற்றி பெறும்வரை எமது தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட உணர்வுகளை அடுத்த அடுத்த தலைமுறைக்கு ஊட்டுவது எமது வரலாற்றுக் கடமை" என்றுள்ளது.

# கட்சிகள் என்ன முடிவெடுத்தாலும் தமிழ் மக்கள் என் பக்கமே!

## நம்பிக்கை வெளியிட்டார் ஜனாதிபதி



தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கியுள்ள போதும் இந்த நாட்டின் பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மக்களின் அமோக ஆதரவு எனக்கு இருக்கின்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற விசேட நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இனம், சாதி, மதம் அன்றி நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் குறித்து கருத்தில் கொள்ளப்படும் தேர்தலை எதிர்கொள்வதில் மகிழ்ச்சி யடைவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை விரைவாக ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக மாற்றா விட்டால் 2035 - 2040 காலப் பகுதியில் மற்று மொரு நெருக்கடி ஏற்படக் கூடும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் தாம் விரும்பிய அமைச்சர வையை நியமிக்காது நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை நியமிக்கவுள்ளதாகவும். இதற்காக மக்கள் தமக்கு விருப்பமானவர்களை புதிய பாராளுமன்றத்திற்கு அனுப்புவார்கள் என்றும் தெரிவித்தார்.

# பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமாகுமரனுடன் சிறீதரன் எம்.பி சந்திப்பு!



பிரித்தானியாவின் முதல் தமிழ் பாராளுமன்ற உறுப்பினரும், ஈழத்தமிழ் வம்சாவழியைச் சேர்ந்தவருமான உமா குமரனுக்கும், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பு, பிரித்தானிய நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றையதினம் நடைபெற்றுள்ளது.

தமிழ்மக்களின் மீது இலங்கை அரசால் கட்டமைக்கப்பட்ட வகையில் புரியப்பட்ட இனப்படுகொலை, அதற்கான நீதிப் பொறிமுறை, ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் சமகால இன ஒடுக்குமுறைகள், மக்களின் அடுத்தகட்ட எதிர்பார்ப்புகள் நோக்கிய அரசியல் முன்னகர்வுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

குறித்த சந்திப்பில், பிரித்தானிய தொழிற் கட்சிக்கான தமிழர்கள் அமைப்பின் பிரதிநிதி சென் கந்தையா மற்றும் பிரித்தானியாவின் சிரேஷ்ட சட்டத்தரணிகளுள் ஒருவரான கணநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலண்டனில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் வெளியீடு







இலண்டன் மாநகரில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்கள் எதிர்வரும் அக்டோபர் மாதம் வெளியிடப்பட உள்ளது.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும், இலங்கை இதழியலில் சிவகுருநாதன், ஆகிய

ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்கள் வெளியீடு லண்டன் ஈலிங் அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற உள்ளது. (London Ealing Amman temple, 5, Chapel Rd, London W13 9AE, U.K)

எதிர்வரும் 26ம் திகதி அக்டோபர் 2024 சனிக்கிழமை மாலை 4மணி முதல் 6.30 மணி வரை இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் தலைமையுரையை இங்கிலாந்து சைவ மன்றங்களின் காப்பாளர் திரு. திரு. சிவா தம்பு அவர்கள் வழங்குவார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த ஆவணக் காப்பாளர். திரு.பத்மநாப ஐயர், மற்றும் திரு. சி.கிருபாகரன், திரு.சண்முகதாசன் ஆகியோர் வழங்குவர்.

பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை திரு.பா.நடேசன் அவர்கள் நிகழ்த்துவார். அதன்பின் ஓர் மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை திரு.நா.சபேசன் அவர்கள் ஆற்றுவார்.

தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும் நூலின் அறிமுகவுரையை டாக்டர்.வே. ரவிமோகன் அவர்கள் ஆற்றுவார். அத்துடன் இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை திரு.கோவிலூர் செல்வராஜன் அவர்கள் ஆற்றுவார்.

அத்துடன் இந்நூல் வெளியீட்டில் ஈழத்து சிற்றிதழ்கள் பற்றிய சிறப்புரையை திருமதி. மாதவி சிவலீலன் அவர்கள் வழங்குவார்.

இலண்டன் மாநகரில் நிகழும் இந்நூல் வெளியீட்டின் ஏற்புரையை திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் நிகழ்த்துவார்.

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொழில் தேடுபவரா நீங்கள்?**

- பத்திரிகை மற்றும் அச்சுத்துறையில் உடனடி வேலைவாய்ப்பு!
- நீங்கள் வசிக்கும் மாவட்டத்திலேயே உங்களுக்கான முழுநேர மற்றும் பகுதிநேர வேலைவாய்ப்புகள்.
- ஆண் - பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

தொடர்புகள் - 0765673339
0771499094

தேசியம்

# ‘கல்வி சவால்களும் பலிகேடாகும் மாணவர் சமுதாயமும்’



க.இளையரசி
கல்வி, பிள்ளை நலத்துறை மாணவி,
கிழக்கு பல்கலைகழகமஇலங்கை

உலகளவில் மனிதன் சமுகத்தில் உயர்வாக மதிக்கப்படவும் போற்றப்படவும் முக்கிய காரணமான கல்வி வளரச்சியை மேம்படுத்துவதில் எமது நாடான இலங்கையானது குறிப்பிடதக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.இருப்பினும் எமது சவால்மிகு கல்விகொள்கை மற்றும் திட்டமிடல் நடைமுறையானது மாணவர் வாழ்க்கையை பலிகேடாகுகின்றமை எமது கல்வியின் முக்கியமான பிரச்சினைகளுல் ஒன்றாக கருதப்படுகின்றது.

இந்த வகையில் உலகில் அதிகம் படித்தவர்களை கொண்ட நாடு எது? என்று கேட்டால் பலரும் அமெரிக்கா, இங்கிலாந்து என பதிலளிப்பார்கள் ஆனால் அது முற்றிலும் தவறு பல நாடுகள் அமெரிக்கா, இங்கிலாந்தையும் பின்னுக்கு தள்ளி கல்வி அறிவால் முன்னிலை வகித்து வருவது நாம் அறியாத நிதர்சனமான உண்மையாகும். பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேன்பாட்டிற்கான அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையின் படி உலகில் அதிகம் படித்தவர்களை கொண்ட நாடுகளின் பட்டியலில் கனடா முதலிடத்தில் உள்ளது. அதன்படி கனடாவில் 59.96 சதவீதம் படித்தவர்களும் மேலும் சீனா 52.68 சதவீதம் கல்வி அறிவுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளது. இதில் வளர்முக நாடான இலங்கையின் கல்வி எங்கு உள்ளது? என்பது நாம் சிந்திக்க வேன்டிய விடயமே பின்லாந்து,இந்தோனேசியா, பிரான்ஸ் போன்ற சிறந்த கல்வி கொள்கைகளை கொண்ட நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை கல்வி, கலைத்திட்டம் என்பன பல்வேறு சிக்கல்களை கொண்டு காணப்படுகின்றது.இதனாலேயே இலங்கை இன்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பட்டியலிலும் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறான இலங்கையின் தற்கால கல்வியானது பல்வேறு பிரச்சினைகளை கொண்டுள்ளதுடன் நாட்டின் எதிர்கால தலைவர்களாக கருதப்படும் இளம் சமுதாய மாணவர்களின் வாழ்கையில் பாதிப்பை செலுத்தி வருகின்றது.அந்த வகையில் இலங்கையில் தற்போதைய அரசாங்கம் எதிர்நோக்கும் பொருளாதார அரசியல் சிக்கலானது கல்வி துறையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை கல்வியானது ஆரம்பகல்வி, இடைநிலை கல்வி, உயர் கல்வி என்று 3 பிரிவுகளை கொண்டு வகுக்கப்பட்டுள்ள போதிலும் ஒவ்வொரு பிரிவினரும் வெவ்வேறான பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர். “காலம் பொன்னானது” என்பதனை அறியாத இலங்கை கல்வி அமைச்சானது மாணவர்களின் எதிர்காலம் கல்வி வயது என்பனவற்றை பற்றி சற்றும் சிந்திக்காமல் பல்கலைகழக கல்விசார ஊழியர்களும், பாடசாலை ஆசிரியர் சங்கத்தினரும் தனது சம்பள பிரச்சினைக்காக வீதிகளில் போராட வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளியுள்ளது என்பது மாணவர்களாகிய நாங்களும், பட்டதாரிகளும், ஆசிரிய தொழிற்சங்கத்தினரும் வேதனைகுள்ளாகும் விடயமாகும். இதற்கான பிரதான காரணம் “கல்வி கற்று படித்தவர்களின் தகுதிக்கேற்ற ஊதியத்தினை இலங்கை கல்வி அமைச்சு வகுத்து வழங்காமையே ஆகும். அத்தோடு பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற

நாடுகளோடு ஒப்பிடும் போது இலங்கையில் “ஆசிரியர்” தொழில் என்பது எவ்வாறு மதிக்கப்படுகின்றது என்பதும் அவர்களுக்கான ஊதியம் முறையாக வழங்கப்படுகின்றதா என்பதும் நம் சிந்தனையில் இலங்கை கல்வியில் காணப்படும் தற்கால கால முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றே. இதனாலேயே இன்று பெரும்பாலான ஆசிரியர்கள் பணம் சம்பாரிக்கும் நோக்கில் மாணவர்களை பிரத்தியேக வகுப்புகளில் பகடைக்காயாகி வருகிறார்கள்.

*Covid-19* தொற்றினை தொடர்ந்து பாதிக்கபட்ட எமது நாட்டின் பொருளாதார சிக்கலானது மாணவர்களின் கல்வியில் பரீட்சைகள் பெறுபேறுகளின் வெளியேற்றம் என்பனவற்றை பின் தள்ளியதுடன் இன்று வரை குறித்த கால இடைவெளியில் தவணை பரீட்சைகளும் சரி, கா.பொ.த உயர்தரம், சாதாரணதரம், புலமை பரீட்சை என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி உரிய கால இடைவெளியில் இவை நடைபெறுவதனை தடுத்துள்ளது.அத்தோடு திடீர் ஆசிரியர் சங்க சுகவீன விடுமுறை, தொழிற்சங்க போராட்டங்களால் பாடசாலை விடுமுறைகள் வழங்கப்படுவதால் மாணவர்களின் கல்வி மீதான ஆர்வம் மற்றும் நம்பிக்கை சீர்குலைக்கப்பட்டுள்ளது. அத்தோடு தகுதி அடிப்படையில் Z புள்ளிகளை அடிப்படையாக கொண்டு 13 வருடம் பாடசாலை கல்வி கற்று தனது ஆர்வம், இலட்சியத் தோடு உயர்தரத்தில் சித்தி எய்திய ஓர் மாணவன் தனது பல்கலைகழக கனவை நிறைவேற்ற சுமார், 1 வருட காலம் வீட்டில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. படித்து பட்டம் பெற்றவரை விட காட்டிலும் படிக்காதவர்கள் அதிகம் சம்பாதிப்பதை பார்க்கும் மாணவர்கள் மனதில் “நாம் பல்கலைகழகங்களில் படித்து பட்டம் பெற்று என்ன பயன்”? என்ற மனநிலைக்கு தள்ளப்படுகின்றனர்.



இவற்றுக்கு மேலதிகமாக பல்கலைகழகங்களில் படித்த பட்டம் பெற்று வேலையில்லா பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் வேலையில்லா பட்டதாரி சங்கத்தினை பார்க்கும் போது கல்வி கற்றுகொண்டிருக்கும் மாணவர்களும் அதிகரித்த பொருளாதார நெருக்கடி மற்றும் வறுமை, பாடசாலை பொருட்களின் விலையேற்றம் போன்ற பல்வேறு காரணிகளால் தனது நம்பிக்கையை தளரவிட்டு வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடுகள் நோக்கி செல்லல், பாடசாலை இடைவிலகல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.இன்று இலங்கையில் கலைதிட்டமானது காலத்திற்குகாலம் சீர்திருத்தப்பட்டு தொழிற்கல்வி, வாழ்நாள் நீடித்த கல்வி,தொலைகல்வி என பல்வேறு கல்வியை திட்டமிடுகின்ற போதிலும் அவற்றை பாடசாலைகளில் முறையாக பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மூலம் வழங்கப்படுதல் என்பது குறைவான சாத்தியப்பாடுகளை கொண்டதாகவே காணப்படுகின்றது. இன்று கல்வி சீர்திருத்தங்களில் 7 அடிப்படை தேர்ச்சிகளும், வேலை உலகிற்கு தயாராகலவேலை உலகிற்கு தயாராகல் என்பதும் எந்தளவு நிறைவேற்றப்படுகின்றது என்பதும் கேள்வி குறியாகவும் வெறும் பரீட்சையை மட்டும் அடிப்படையாக கொண்டு “ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது” என்ற பழமொழிற்கிணங்கவே இன்றைய கல்வி காணப்படுகின்றது.

மாணவர்களிடையே தேடி கற்றல், சுயகற்றல், தொழிநுட்ப அறிவு, நுண்ணறிவு என்பதும் மட்டுப்படுத்தபட்டதாகவே காணப்படுகின்றது. சாதாரண தர பரீட்சைகளின் பின்னரே தனகென ஓர் துறையை தேர்ந்தெடுக்க வேண்டியநிலை கொண்ட இலங்கை கல்விமுறையானது பெரும்பாலான மாணவர்களின் துரநோக்கை பின்தள்ள செய்கின்றது இதனாலேயே இன்று வைத்தியர்கள், இன்ஞ்சினியர்கள் உருவாதல் தடைபடுவதுடன் வைத்திய, வணிக தொழிநுட்ப துறைகளை தெரிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுகின்றது.

இன்று பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர் தொழில்வாண்மைதுவம் ரீதியாக வளர்ச்சியடையாமை என்பனவையும் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றாகும். நவீனமயமாக்க உலகில் தொழிநுட்ப அறிவு என்பது இன்றியமையாததாக காணபடுவதோடு அவற்றை மாணவர்கள் பாடசாலைகளில் முறையாக கற்றுகொள்வதில் இன்று பெரும்பாலான பாடசாலைகள் முறையாக பயிற்றப்பட்ட ஆசிரியர்களை கொண்டிருக்கவில்லை. உதாரணமாக இன்று எமது எதிர்கட்சி தலைவர் அமைச்சர் சஜித் பிரேமதாச அவர்கள் நாட்டின் பல பாடசாலைகளில் திறன் வகுப்பறை வசதிகளை செய்துகொடுத்து வந்தாலும் அதில் மாணவர்களுக்களுக்கு முழுமையான அறிவை வழங்க முறையாக பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பெரும்பாலான பின்தங்கிய பாடசாலைகளில் பற்றாக்குறையான நிலையிலே காணப்டுகின்றது.

இதனாலேயே மாணவர்கள் பல்கலைகழக உயர்கல்வி தெரிவு

(11ஆம் பக்கம் பார்க்க)

# கட்சிக்கான கொடி அல்ல வருங்கால தலைமுறையின் வெற்றிக்கான கொடி



## தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்

தமிழக வெற்றிக் கழகத்தின் கட்சிக் கொடியை பனையூரில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் அக் கட்சியின் தலைவர் விஜய் அண்மையில் அறிமுகம் செய்து வைத்த துடன் கொடியையும் ஏற்றி வைத்தார்.

கட்சிக் கொடியின் மேலும் கீழும் சிவப்பு நிறமும் நடுவில் மஞ்சம் நிறமும் உள்ளது கொடியின் நடுவில் வாகை மலர் இருக்க அதன் இருபுறமும் யானை உள்ள பட்டுள்ளது இந்த விழாவில் கட்சியை பிரபலப்படுத்தும் வகையில் பிரசாரப் பாடல் அடங்கிய குறுந்தகடு வெளிவிடப்பட்டது.

கவிஞர் விவேக் எழுதி தமன் இசைய மைத்து இந்த பாடல் வெளியிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணம் கருதி குறைந்த அளவு நிர்வாகிகளே இக் கூட்டத்தில் பங்கேற் றுள்ளனர் விழாவின் ஆரம்பத்தில் விஜய் உறுதிமொழி வாசிக்க கட்சி நிர்வாகிகள் உறுதி மொழியை ஏற்றுக் கொண்டனர்.

சென்னை பனையூர் அலுவலகத்தில் தமிழக வெற்றிக்கழகக் கொடியை அறிமுகப் படுத்தி கொடிப் பாடலை நடிகர விஜய் வெளியிட்டு உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது. அரசியல் பயணத்தை தொடங்கி பெப்ரவரி மாதம் கட்சியை அறி வித்தேன் அப்போதில் இருந்து இந்த நாளுக் காகத்தான் காத்திருந்தேன்.

கட்சியின் கொடியை கொடியாக மீட்டும் நான் பார்க்கவில்லை தமிழ் நாட்டின் வருங் கால எதிர் காலமாகவே பார்க்கிறேன் மாநாட் டிற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின் றது.

விரைவில் மாநாட்டிற்கான திகதி அறிவிக் கப்படும். என் நெஞ்சில் குடியிருக்கும் தமிழ் நாட்டு மக்களின் நலனுக்காக நாம் அனை வரும் இணைந்து உழைப்போம். நம்பிக்கை யாக இருங்கள், நல்லதே நடக்கும் வெற்றி நிச்சயம் எனத் தெரிவித்தார்.

## தமிழ் தேசிய...

*(7ஆம் பக்கத் தொடர்ச்சி)*

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென்று பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வை யின்கீழ் விசேட இடைக்காலப் பாது காப்பு ஏற்பாடு ஒன்று (Protective Mechanism) உருவாக்கப் பட வேண்டும்.

மேற்கண்ட தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் நிலைப்பாட்டை ஏற்றுத் தமிழ் மக்கள் இதுவே தமது பொது நிலைப்பாடு என்று உலகுக்கும் தென்னிலங்கைக்கும் வெளிக்காட்ட பொதுக் கட்டமைப்பின் பொது வேட்பாளராகிய திரு.பா.அரியநேத்திரன் அவர்களுடைய சங்குச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று அன்புரிமை யோடு வேண்டி நிற்கின்றோம்.

பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக வருவ தற்காக முன் நிறுத்தப்படவில்லை. அவர் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்காகவும், கட்சிகளை ஒன்றிணைப்பதற்காகவும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருமித்த குரலில் ஒலிக்கச் செய்வதற்காக வுமே முன் நிறுத்தப்படுகிறார். ஒன்று திரண்ட தமிழ் மக்கள் உலகத்தின் முன்னும் தென்னிலங்கையின் முன்னும் பலமாக நிமிர்ந்து நிற்பார்கள். அதாவது அரியநேத்திரன் அவர்களுக்கு வழங்கப்படும் வாக்குகள் தமிழ்மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கும் வாக்குகள்தான். தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தவர்களைக் கௌரவிக்கும் வாக்குகள்தான். எனவே தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது தமிழ் மக்களின் தேசியக் கடமையாகும். சங்குச் சின்னத்துக்கு ஆகக்கூடிய தமிழ் வாக்குகளை வழங்குவதன் மூலம் அன்பான தமிழ் மக்களே எங்களை நாங்களே வெற்றி பெறவைப்போம்.

## வரலாற்று...

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளர் பிழை என்று சொல்பவர்கள் யாருமே இதுவரையிலும் எந்தத் தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்று தெளிவான முடிவை மக்களுக்கு கூறவில்லை.

ஏன் கூறவில்லை? ஏனென்றால் தென் இலங்கையில் உள்ள எந்த ஒரு கட்சியும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்தபட்ச வாக்குறுதியைக்கூட தருவதற்குத் தயாராக இல்லை. இப்பொழுது தராத வாக்குறுதியை அவர்கள் பிற கெப்பொழுதும் தரப்போவதில்லை.

எனவே இந்த இடத்தில் தமிழ் மக்கள் தெளிவாக செயல்முனைப்போடு இரண்டு முடிவுகளில் ஒன்றைத்தான் எடுக்கலாம். ஒன்று பகிஸ்கரிப்பது அல்லது தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பது. தமிழ்ப் பொது வேட்பாளருக்குள் பாகிஸ்கரிப்பும் உண்டு.அதாவது தென்னிலங்கையில் உள்ள எந்த ஒரு வேட்பாளரையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால்தான் தமிழ் வேட்பாளர் முன்னிறுத்தப்படுகிறார்.

கடந்த 84 ஆண்டுகளுக்குள் தமிழ் மக்கள் எடுத்த நிர்ணயகரமான ஒரு முடிவாக அதை மாற்ற வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். 83 ஆண்டுகளுக்கு முன் பிலிப் குணவர்த்தன "யாழ்ப்பாணம் இப்பொழுது வழிகாட்டியுள்ளது" என்று சொன்னார். இப்பொழுது கிழக்கிலிருந்து ஒரு பொது வேட்பாளர் கொண்டு வரப்பட்டிருக்கிறார். இம்முறை வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர் தாயகம் பொது வேட்பாளரை முன்னிறுத்துகின்றது. தமிழ்ப் பொது வேட்பாளர் அதிகரித்த வாக்குகளைத் திரட்டினால் அது தென்னிலங்கைக்கும் வெளியுலகத்துக்கும் தெளிவான கூர்மையான செய்திகளைக் கொடுக்கும். தமிழ் ஐக்கியத்தை மேலும் பலப்படுத்தும். எனவே இப்பொழுது தமிழ்மக்கள் முன்னாள் உள்ள தெரிவு இரண்டுதான். ஒன்று, தென்னிலங்கை வேட்பாளர்களுக்காக காத்திருந்து மேலும் சிதறிப் போவது. இன்னொன்று தமிழ்ப்பொது வேட்பாளரை பலப்படுத்துவதன்மூலம் முழு இலங்கைக்கும் வழிகாட்டுவது.

## கல்வி...

*(10ஆம் பக்கத்தொடர்ச்சி)*

செய்யப்படுகின்ற போது தொடர்ந்து தனது கல்வியை தொடர்கையில் தொழிநுட்ப அறிவு மற்றும் ஆங்கில அறிவு போதாமையால் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். இவற்றுக்கு மேலதிகமான கல்வியில் காலதாமதம் என்பதும் இன்றைய கல்வியில் ஓர் முக்கியப் பிரச்சினையாக உள்ளது. இதனாலேயே இன்று இலங்கையில் ஓர் மாணவன் பல்கலைகழக பட்டப் படிப்பைபடிக்க கிட்டதட்ட 25 வயதுக்கு மேலாக காத்திருக்க வேண்டியுள்ளது. இணையவழி கற்றலால் மாணவர்களின் தொடர்பாடல் திறன் எழுதும் திறன், தலைமைத்துவ பண்பு என்பன குறைவடைந்து கொண்டே செல்வதோடு உளரீதியான பாதிப்புகளை எதிர்நோக்குகின்றமை தொழில் ரீதியான பயிற்சிகள் வழங்க முடியாத மாணவர்கள் வேலை உலகிற்கு தயாராகாமை, மாணவர்களின் இலக்கு, தூரநோக்கு மட்டுபடுத்தப்படல் கல்வி மீதான அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளமை என பல்வேறு பிரச்சினைகளை இலங்கையில் தற்கால கல்வியானது எதிர்நோக்கி வருகின்றது.

நீண்ட வரலாற்றை கொண்டதாகவும் எமது ஜனநாயக நாட்டின் சமூக விருத்திக்கும் சமூக பொருத்தப்பாடுடைய நற்பிரஜைகளை உருவாக்குவதற்கும் அவசியமான எமது நாட்டின் கல்வியானது தற்காலத்தில் பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருவதுடன் அனைவருக்கும் கல்வி, கல்வியில் ஜனநாயகம், சமவாய்ப்பு என்பனவற்றை வழங்கி தேசிய கல்வி ஆணைக்குழுவின் கல்வி இலகுகளான தேசிய ஒருமைப்பாடு, ஒருங்கிணைப்பு தேசிய ஒற்றுமை, பொருளாதார முன்னேற்றம், வேலை வாய்ப்பு, சர்வதேச சமூகத்தால் தனக்கென இடத்தை வகித்தும் கொள்ளும் தொடர்புகளை விருத்தி செய்தல் என்பனவற்றை அடையும் வகையில்

பாடசாலை முறைமை, கலைத்திட்டம், கலைத்திட்ட அமுலாக்க முறைகள், தேர்வுகளும், மதிப்பீட்டு முறைகளும், பாடசாலை சமுதாய பொறுப்பு கல்வி ஆளுணியினர் பயிற்சி முறைகள்,கல்வி நிருவாக முகாமைத்துவ முறைகள் என்பனவற்றை முறையாக திட்டமிட்டு பின்பற்றுவதன் மூலமாக கல்வியில் நாம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வரலாம் என்பது நான் அறிந்த நிதர்சனமான முடிவாகும்.

இவ்வாறாக இலங்கை கல்வி எதிர்நோக்கும் கல்வி சிக்கல்களை இலங்கை கல்வி அமைச்சு முறையாக திட்டமிட்டு தீர்ப்பு வழங்குவதன் வாயிலாக எதிர்கால தலைவர்களாகிய மாணவ சமூகத்தை முறையாக கட்டியெழுப்பி நாட்டை அபிவிருத்தி அடைய செய்யலாம் என்பது குறிப்பிடதக்க அம்சமாகும்.அபிவிருத்தியின் முக்கிய அளவுகோலான கல்வியில் ஏற்படுத்தம் மாற்றமே உலகலாவிய ரீதியில் ஒரு நாட்டினை அடையாளப்படுத்த செய்யும்.எனவே சிக்கலில்லாத கல்வி கொள்கைகளை உருவாக்கி எதிர்காலத்தை கட்டியெழுப்புவோம்.

"அதிகரித்தஅதிகரித்த பிரதியேக பிரதியேக வகுப்புக்களின் வகுப்புக்களின் திசைதிருப்பலுக்கு திசைதிருப்பலுக்கு பகடைக்காயாகும் பகடைக்காயாகும் மாணவர்கள்.."

"ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நாட்டின் பெருந்தோஆசிரியர் வெற்றிடங்களுக்கு நாட்டின் பெருந்தோட்டட்டப்புற தமிழ் மொழிப்புற தமிழ் மொழி மூலம் பாடசாலைகளுக்கு ஆசிரியர் உதவியா ளர்களை ஆட்சேர்ப்பதற்கான ஆசிரியர் உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிபரீட்சை மூலம் க.பொ.சிறந்த போட்டிபரீட்சை மூலம் க.பொ.சாதாரண தர, உயர்தரதாரண தர, உயர்தர தகைமை தகைமை மாணவர்களுக்கு ஆசிரியர் நியமன திட்டமிடல் கல்வியமைச்சு முன்னெடுப்பு மாணவர்களுக்கு ஆசிரியர் நியமன திட்டமிடல் கல்வியமைச்சு முன்னெடுப்பு வேலையில்லா பட்டதாரிகள் 2000ற்கு மேற்பவேலையில்லா பட்டதாரிகள் 2000ற்கு மேற்பட்டோர் வீதியில் வேலையிலா போராட்டத்தில்.

"சவால் மிகுந்த உயர்கல்வியும் பொருளாதார சிக்கல்களால் பாடசாலையை விட்டு இடைவிலகும் மாணவர்களின் தொகை அதிகரிப்புப்பும்.






இப்பத்திரிகை 10.09.2024 அன்று இல.12/1 செங்குந்த அங்காடி, பருத்தித்துறை வீதி, யாழ் / நல்லூர் பணிமனையில் உள்ள அகரவ் பப்ளிசிங் மீடியா பிறிண்டிங் ஹவுஸ் (பிறைவேற் லிமிட்ரெட்) நிறுவனத்தினரால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.